# சங்கத்தமிழ்

குரல் – 01 | வாராந்திர சர்வதேச மின் செய்தித்தாள் | மே 18 2021


## 12 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் நினைவு நாள்

## தமிழ் இனவழிப்பு – மே 18











## இருள் ஏந்துவோம்! –மே 18

# முள்ளிவாய்க்கால் நினைவு சிறீலங்கா படைகளால் தகர்ப்பு

முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் நடுகை செய்தற்காக நினைவுக்கல் முள்ளிவாய்க்கால் பகுதிக்கு கொண்டு வரப்பட்டு இறக்கிவைக்கப் பட்டிருந்தது.

இந்த நிலையில் சிறீலங்கா பொலிஸார், இராணுவம், மற்றும் புலனாய்வாளர்கள் இணைந்து நினைவுக்கல் நடுகை செய்யமுடியாது என தடை ஏற்படுத்திருந்தனர்.

இதனை தொடர்ந்து இரவோடு இரவாக அப்பகுதி சிறீலங்கா படையினரின் கட்டுப்பாட்டில் கொண்டுவர பட்டிருந்த தோடு முள்ளிவாய்கக்ல் பகுதியில் உள்ள நினைவு முற்றத்துக்கு செல்லும் அனைத்து வீதிகளிலும் உள்நுழைய தடை விதிக்கப்பட்டிருந்தது.


இந்த நிலையிலேயே இரவோடு இரவாக சுமார் 2000 கிலோவுக்கு அதிகமான எடையுடைய நினைவுக்கல் கனரக வாகனங்களை கொண்டு அகற்றி செல்லப் பட்டுள்ளது.

சிங்கள அரச இயத்திரத்தால் முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்பில் அழிக்கப்பட்ட அப்பாவி தமிழீழ் மக்களை நினைவு கூர அமைக்கப்பட்டிருந்த நினைவுத் தூபி கடந்த 12.05.2021 அன்று இடித்தழிக்கப்பட்டிருப்பது.

இது மிகவும் மிலேச்சத்தனமானதும், நாகரிக உலகில் எந்தவொரு சராசரி அல்லது சர்வதிகார அரசும் செய்யத்துணியாததை சிறீலங்கா அரசு செய்துள்ளது.





# முள்ளிவாய்க்கால் நினைவிடத்தில் திரு. எம்.கே. சிவாஜிலிங்கம் சுடர் வணக்கம்


சிங்கள அரச இயத்திரத்தால் முள்ளிவாய்க்கால் நினைவிடத்தில் நினைவேந்தலுக்கு தடை விதிக்கப்பட்ட நிலையிலும் சிறீலங்கா படைகளின் அழிப்புக்கு உட்பட்ட உறவுகளுக்காக எம். கே. சிவாஜிலிங்கம் நினைவு கூர்ந்து சுடரேற்றி வணக்கம் செலுத்தினார்.

17.05.2021 காலை முதல் முள்ளிவாய்க்கால் நினைவு முற்ற பகுதியில் நூற்றுக்கணக்கன சிறீலங்கா படையினர், புலனாய்வாளர்கள், காவல ் துறையினர் குவிக்கப்பட்டு அந்த பகுதிக்குள் எவரும் நுழையமுடியாதடிப கண் காணிப்பு இறுக்கமாக்கப் பட்டுள்ள நிலையில் திரு. சிவாஜிலிங்கம் சுடர் வணக்கம் செலத்தியுள்ளார்.






## தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்




# தமிழீழ தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து



உலகில் எந்தப்பகுதியில் எந்தச் சூழலில், எந்தத் தகுதியுடன் நீங்கள் வாழ்ந்தாலும் தமிழீழத்தில் தான், அந்தத் தாயக புமியில் தான் உங்களது வேர் ஆழப் புதைந்து கிடக்கிறது. இந்த மண்ணில் தான் உங்களது இனத்துவத்தின் அடையாளம் பதிந்து கிடக்கிறது. இந்த மண் உங்கள் இரத்தத் தோடும், ஆன்மாவோடும், உங்களது வரலாற்றோடும் ஒன்று கலந்து கிடக்கிறது. இத்தாயக தேசம் எதிரியின் ஆதிக்கப் பிடிக்குள் சிக்கி அழிந்து போகாது பாதுகாப்பதில் உங்களுக்கும் பெரும் பங்கு உண்டு, பொறுப்பு உண்டு, கடப்பாடு உண்டு.

# எங்கள் தமிழீழம்

எங்கள் தமிழீழம் எத்தனை
அழகு
வனப்போடும் வளம் நிறைந்தது.
நிலக்கடல் சூழ்ந்த
நீண்ட நிலப்பரப்பு
மீனொடு முத்தும்
கரைதனில் உப்பும்
கனிப்பொருள் பலவும்
தானாக விளைவது
பச்சை வயலோடு
அடவி சூழ் திருநாடு
தேனோடு பாலும்
நெல்மணிப் பொன்னும்
சீராகப் பொங்கி வழியுது
ஏற்றுமதி செய்தும்
நிறைந்திருந்த நாடு
பஞ்சமென்று அஞ்சி
மாற்றானை மண்டியிடுமா?
மானமே பெரிதென்ற
மறதமிழர் மரபு வழி நாங்கள்
பொருளாதார தடைகண்டு
பொசுங்கிப் போவோமா?
உற்பத்தி முயற்சிகள்
உரமுடன் எழுந்தன
கைத் தொழில் சிறந்தது
கடற்றொழில் வளர்ந்தது
பயிரது வளர்ந்திட
அமுதொன்றும்
கிடைத்தது.
அன்னாசி, கோப்பியோடு
கொக்கோவுமிங்கு
விளைந்தன
இன்னும் அடைப்பொறி
கன்னில்
கோழிக்குஞ்சுகள்
போரிக்கும் விந்தையும்
இங்கே நிகழ்ந்தது
எங்கள் தமிழீழம்
வளங்கொளித் தழுகுடன்
மிளருது...
கண்ணில் தெரியுதெங்கள்
எதிர்காலம் பசுமையாய்
நிச்சயம் தமிழீழம்
நிறைவான நாடாகும்
உச்சமாய் நாளை
புதிய கண்டுபிடிப்புக்கள்
இன்னும் இங்கு எழும்
அன்றவற்றைக் கண்ட வியந்து
பார்க்கப் படிக்கவென
உலகமே இங்குவரும்
எங்கள் தமிழீழம்
வனப்புடன் வளமும்
நிகரில்லா வலிமையும்
தன்னகத்தே கொண்டது.
-தூயவள்-


சங்கத்தமிழ்

## தொடர்புகளுக்கு

**தொலைபேசி** (TP)

**437 345 4203**

**மின்னஞ்சல்** (Email)

**sangathamilcanada@gmail.com**

**முகநூல்** (Facebook)

**Sangathamil Canada**



அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பராதார் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# ஈகைச்சுடர் முத்துக்குமார்

இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்து, சென்னையில் தீக்குளித்து சாவடைந்த நம் அருமைச் சகோதரன் ஈகைச்சுடர் முத்துக்குமாரின் சாவு வாக்குமூலம்! – 29.01.2009

தீக்குளிக்கப் போவதற்கு சில நிமிடங்களுக்கு முன்பு முத்துக்குமார் வினியோகித்த துண்டு அறிக்கை




**விதியே விதியே என்செய் நினைத்திட்டாய் என் தமிழ் சாதியை**

அன்பார்ந்த உழைக்கும் தமிழ் மக்களே

வணக்கம். வேலைக்குப் போகும் அவசரத்திலிருக்கும் உங்களை இப்படி சந்திக்க நேர்ந்ததற்கு நான் வருந்துகிறேன். ஆனால் வேறு வழியில்லை. என் பெயர் முத்துக்குமார். பத்திரிகையாளர் மற்றும் உதவி இயக்குநர். தற்சமயம் சென்னையில் உள்ள பத்திரிகை ஒன்றில் வேலை செய்து வருகிறேன். உங்களைப்போல் தான் நானும். தினமும் செய்தித்தாளையும், இணையத்தையும் பார்த்து பார்த்து, தினம் தினம் கொல்லப்பட்டு வரும் எம் சக தமிழர்களைக் கண்டு சாப்பிட முடியாமல், தூங்க முடியா மல், யோசிக்க முடியாமல் தவிக்கும் எத்தனையோ பேரில் ஒரு சா மானியன். வந்தாரை வாழவைக்கும் செந்தமிழ் நாட்டில் சேட்டு என்றும், சேட்டனென்றும் வந்தவனெல் லாம் வாழ, சொந்த ரத்தம் ஈழத்தில் சாகிறது. அதைத் தடுத்து நிறுத்துங்கள் என்று குரல் கொடுத்தால், ஆம் என்றோ இல்லை என்றோ எந்த பதிலும் சொல்லாமல் கள்ளமௌனம் சாதிக்கிறது இந்திய ஏகாதிபத்தியம். இந்தியாவின் போர் ஞாயமானதென்றால் அதை வெளிப் படையாகச் செய்ய வேண்டியதுதானே.. ஏன் திருட்டுத் தனமாக செய்ய வேண்டும்?

ராஜீவ்காந்தியைக் கொன்றார்கள் என்ற சொத்தை வாதத்தை வைத்துக்கொண்டு, சில தனிநபர்களின் பலிவாங்கல் சுயநல நோக்கங்களுக்காக ஒரு பெரும் மக்கள் சமூகத்தையே கொன்று குவிக்கத் துடிக்கிறது இந்திய அதிகாரவர்க்கம். ராஜீவ் காந்தி கொலையில் விடுதலைப்புலிகள் மட்டும் குற்றம்சாட்டப்படவில்லை. தமிழக மக்களையும் குற்றவாளிகள் என்று குற்றம் சாட்டியது ஜெயின் கமிசன் அறிக்கை. அப்படியானால் நீங்களும் ராஜீவ்காந்தியைக் கொலை செய்த கொலை காரர்கள் தானா?

ஜாலியன் வாலாபாக்கில் வெள்ளையன் கொன்றான் என்றார்களே, இவர்கள் முல்லைத் தீவிலும் வன்னியிலும் செய்வதென்ன? அங்கு கொல்லப்படும் குழந்தைகளைப் பாருங்கள். உங்கள் குழந்தைகள் நினைவு வரவில்லையா? கற்பழிக்கப்படும் பெண்களைப் பாருங்கள். உங்களுக்கு அது போன்ற வயதில் ஒரு தங்கையோ, அக்காவோ இல்லையா? ராஜீவ் கொல்லப்பட்டபோது காங்கிரசின் முக்கிய தலைவர்கள் ஏன் அவருடன் இல்லை, கூட்டணிக்கட்சித் தலைவியான ஜெயலலிதா, தமிழ்நாட்டில் ராஜீவ் கலந்துகொள்ளும் ஆகப்பெரிய பொதுக்கூட்டத்தில் ஏன் பங்கெடுக்க போகவில்லை என்பதுபோன்ற கேள்விகள் கேட் கப்படாமலும், இவர்களால் பதில் சொல்லப்படா மலும் கிடக்கின்றன. மக்களே யோசியுங்கள். இவர்கள்தான் உங்கள் தலைவர்களா? பணம், அடியாள் பலம் ஆகியவற்றைக் கொண்டு மிரட்டல் அரசியல் நடத்தி வரும் இவர்கள் நாளை நம்மீதே பாய மாட்டார்கள் என்பதற்கு என்ன நிச்சயம்? அப்படி பாய்ந்தால் யார் நம் பக்கம் இருக்கிறார்கள்?

கலைஞரா? நாடாளுமன்ற உறுப்பினர்கள் ராஜினாமா செய்வார்கள் என்று அப்பொழுதும் அவர் அறிவிப்பார். பிறகு, மத்திய அரசைப் புரிந்து கொள்வார்(?!). பிறகு மறுபடி சரியான முடிவை எடுக்க வேண்டி சட்டமன்றத்தில் தீர்மானம் நிறை வேற்றுவார் - இந்த மாசம், இந்த வாரம், இதுவரைக்கும் என்ன எவனும் தொட்டதில்ல என்கிற வின்னர் பட வடிவேல் காமெடியைப்போல. காகிதம் எதையும் சாதிக்காது மக்களே! இப்பொழுது, உலகத் தமிழினத் தலைவர் என்ற பட்டப்பெயரைச் சூடிக் கொள்ளவும், தமிழ்நாட்டில் இருக்கும் பணத் தையெல்லாம் தன் குடும்பத்திற்கே உரித்தாக்கவும் விரும்புகிற தேர்தல் காலத் தமிழர் கலைஞர் மக்களின் கோபத்தை எதிர் கொள்ள பயந்து மருத்துவமனையில் போய் ஒளிந் துகொண்டுள்ளார். தனது மந்திரிகளுக்கு அவசியப்பட்ட துறைகளுக்காக சண்டப்பிரசண்டம் செய்து சதிராடிய இந்த சூரப்புலி உண்மையில் தமிழுக்காகவோ, தமிழருக்கா கவோ செய்த தென்ன? ஒருமுறை அவரே சொன்னார், “தேனெடுத்தவன் புறங்கையை நக்காமலா இருப்பா” னென்று. இவருடைய பம்மலாட்டத்தையெல்லாம் பார்த்தால் ரொம்பவே நக்கியிருப்பார் போலிருக்கிறேதே...

பட்டினிப் போராட்டத்தின் மூலம் களம் இறங்கியி ருக்கும் சட்டக்கல்லூரி மாணவர்களே! உங்கள் போராட்டம் வெற்றிபெற சகதமிழனாக நின்று வாழ்த்துகிறேன். உங்களோடு களம் இறங்க முடியாமைக்கும் வருந்துகிறேன். ஈழத்தமிழர் பிரச்னை என்றில்லை, காவிரியில் தண்ணீர் விடச் சொல்லும் போராட்டமென்றாலும் சரி, தமிழ்நாட்டிற்காதவரான போராட்டம் எதுவாக இருந்தாலும் சரி, முதலில் களம் காண்பவர்கள் நீங்கள், வழக்கறி ஞர்களும் தான். இந்த முறையும் நான்கு மாதங்களுக்கு முன்பாகவே களத்தில் இறங்கியவர்கள் இந்த இரண்டு தரப்பும்தான். உங்களுடைய இந்த உணர்வை மழுங்கடிக்கவே திட்டமிட்டு இந்திய உளவுத்துறை ஜாதிய உணர் வைத் தூண்டிவிட்டு, அம்பேத்கர் சட்டக்கல்லூரி அனர்த்தத்திற்கு வழிவகுத்திருக்கலாம் என்பது என் சந்தேகம். உலகம் முழுக்க மக்களுக்கான புரட்சிகரப் போராட்டங்களில் முன்கையெடுப்பவர் களாக இருந்தது மாணவர்கள் என்கிற ஜாதிதான். அதேபோல், தமிழ் நாட்டிலும் உங்களுக்கு முந்திய தலைமுறையொன்று இதுபோன்ற ஒரு சூழலில், இதுபோல் குடியரசு தினத்திற்கு முன்பு களம் கண்டுதான் காங்கிரஸ் உள்ளிட்ட தேசியக் கட்சி களைத் தமிழ் மண்ணிலிருந்து விரட்டியடித்தது.

ஆக, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தருணம் உங்கள் கைகளுக்கு மறுபடியும் வந்து சேர்ந்திருக்கிறது. பொதுவாக உலக சரித்திரத் தில் இப்படியெல்லாம் நடப்பதில்லை. கடந்த முறை நடந்ததுபோல், உங்கள் போராட்டத்தின் பலன்களை சுயநலமிகள் திருடிக்கொள்ள விட்டு விடாதீர்கள். போராட்டத்தின் பலன்களை அபகரித் து ஆட்சிக்கு வந்த தி.மு.க. முதலில் செய்த விசயம் மாணவர்கள் அரசியல் ஈடுபாடு கொள்ளக்கூடாது என சட்டம் போட்டதுதான். ஆட் சிக்கு வந்த அது, தமிழின உணர்வுகளை மழுங்கடித்து, ஒட்டுமொத்த தமிழினத்தையும் மகஜர் கொடுக்கும் ஜாதியாக மாற்றியது. அந்த மரபை அடித்து உடையுங்கள். மனு கொடுக்கச் சொல் பவன் எவனாக இருந்தாலும், அவனை நம்பாதீர் கள். நமக்குள்ளிருக்கும் ஜாதி, மதம் போன்ற வேறுபாடுகளை எரித்துக்கொள்ள இதுதான் தருணம். உண்ணா விரதத் தையெல்லாம் தூக்கி யெறிந்துவிட்டு களம் காணுங்கள். உண்மையில், இலங்கையில் இந்திய ராணுவ நடவடிக்கை என் பது தமிழர்களுக்கெதிரானது மட்டுமல்ல. ஒட்டு மொத்த இந்தியர்களுக்குமே எதிரானது. சிங்களச் சிப்பாய்களிடம் கற்றுக்கொள்கிற பாலியல் நுணக் கங்களைத்தானே அவர்கள் அசாமில் அப்பாவிப்

பெண்களிடம் பரிசோதித்துப் பார்த்தார்கள்! விடுதலைப்புலிகளை ஒடுக்குவதற்கான சிங்கள வன் முறை நுணுக்கங்களைக் கற்றுக்கொண்டு வட கிழக்கு மாநிலப் போராளிகளிடம் பயன்படுத்திக் கூர் பார்த்தார்கள்! போதாதற்கு, ஹைட்டியில் சமாதானப் பணிக்காக அனுப்பப்பட்ட ஐ.நா.வின் ராணுவத்திலிருந்து இந்திய மற்றும் இலங்கை ராணுவம் அவரவர்களுடைய பாலியல் நடவடிக் கைகளுக்காக அடித்துத் துரத்தப்பட்டிருப்பதிலிருந்து என்ன தெரிகிறது - இந்தக் கூட்டணி கொள்கைக் கூட்டணியல்ல, பாலியல் கூட்டணி என்றல்லவா!, ஆக இந்திய - இலங்கை இராணுவக் கூட்டு என்பது இந்தியர்களின் அடிப்படை மனித உரிமைகளுக்கும் கூட எதிரானதாக இருப்பதால், அகில இந்திய அளவில் மாணவர்கள், ஜனநாயக அமைப்புகளையும் உங்கள் பின்னால் திரட்டுங்கள்.

இதையெல்லாம் மக்களே செய்ய முடியும். ஆனால், அவர்கள் சரியான தலைமை இல்லாமல் இருக்கிறார்கள். உங்கள் மத்தியிலிருந்து தலை வர்களை உருவாக்குகள். உங்கள் போராட் டத்தை சட்டக்கல்லூரி மாணவர்கல் என்ற இடத்திலிருந்து அனைத்து மாணவர்கள் என்று மாறறுங்கள். உங்களிடமிருக்கும் வேகமும், மக்களிடமிருக்கும் கோபமும் இணைந்து தமிழக வர லாற்றை அடியோடு மாற்றட்டும். ஆன்பலம், பண பலம், அதிகார வெற்றியை உடைத்து எறியுங் கள். உங்களால் மட்டுமே இது முடியும். “நாங்கள் தமிழ் மாணவர்கள், தமிழ்நாட்டின் உயிரானவர்கள், இங்கு தமிழினம் அமைதி கொண்டிருந்தால் ஏடுகள் தூக்கி படிப்போம். எங்கள் தமிழர்க்கின்னல் விளைந்தால் எரிமலையாகி வெடிப்போம்“ என்ற காசி அனந்தனின் பாடலை ஓர் அறிவாயு தமாக ஏந்துங்கள்.. என் உடலை காவல்துறை அடக்கம் செய்துவிட முயலும். விடாதீர்கள். என் பிணத்தைக் கைப்பற்றி, அதை புதைக்காமல் ஒரு துருப்புச் சீட்டாக வைத்திருந்து போராட்டத்தைக் கூர்மைப்படுத்துங்கள். எனக்கு சிகிச்சையோ, போஸ்ட்மார்டமோ செய்யப்போகும் தமிழ்நாடு மருத்துவக் கல்லூரி மாணவர்களே.. உங்கள் கையால் அறுபட நான் புண்ணியம் செய்திருக்க வேண்டும். காரணம், அகில இந்திய அளவில், மருத்துவக் கல்வியில் இட ஒதுக்கீட்டுக்கு எதிராக உயர்சாதி மாணவர்கள் போராடிக்கொண் டிருக்க, தன்னந்தனியாக நின்று, மருத்துவக்கல்வியில் இட ஒதுக்கீட்டுக்கு ஆதரவாகப் போரா டியர்களல்லவா நீங்கள்? எனக்கு செய்வதெல்லாம் இருக்கட்டும். நம் சகோதரர்களான ஈழத்தமிழர் களுக்கு உங்கள் பங்குக்கு என்ன செய்யப் போகிறீர்கள்?

தமிழீழம் என்பது தமீழத்தின் தேவை மட்டுமே அல்ல, அது தமிழகத்தின் தேவையும் கூட காரணம், இராமேஸ்வரம் மீனவர்கள், உலகில் ஆடு, மாடுகளைப் பாதுகாப்பதற்குக் கூட சட்டமும், அமைப்புகளும் இருக்கின்றன. இராமேஸ்வரம் தமிழனும், ஈழத்தமிழனும் மாட்டைவிட, ஆட்டை விடக் கேவலமானவர்கள்? எல்லை தாண்டி போகும் மீனவர்கள், புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் தாக்கப்பட்டு வருவதாக இந்திய மீடியா திட்டமிட்டு பிரச்சாரம் செய்து வருகிறது. இவர்க ளெல்லாம் செய்தித்தாளே படிப்பதில்லையா? சென்னையின் கடற்கரைகளில் அடிக்கடி தைவான் நாட்டை சேர்ந்த மீனவர்கள் வழிதெரியாமல் வந்த்வர்கள் என்று கைது செய்யப்படுகிறார்கள். பல ஆயிரக்கணக்கான கிலோமீட்டர்கள் தூரத்திலிருக்கும் தைவான் மீனவன் வழிதவற முடியுமென்றா, வெறும் பன்னிரெண்டு மைல் தூரத்திற்குள் இராமேஸ்வரம் தமிழன் வழிதவறு வது நம்புவது மாதிரியில்லையாமா?

**தமிழ்நாட்டில் வாழ்ந்து வரும் வெளிமாநிலங்களைச் சேர்ந்த சகோதரர்களே**

உங்கள் சொந்த மாநிலத்தில் கூட இல்லாத நிம்மதியோடும், பாதுகாப்போடும் வாழக்கூடிய மாநிலம் தமிழ்நாடுதான் என்பது உங்களுக்கு அனுப வத்தால் தெரிந்திருக்கும். நாங்கள் இன்று பெரும் இக்கட்டை எதிர்நோக்கியிருக்கிறோம். ஈழத்திலி ருந்துக்கும் எங்கள் சகோதரர்கள் இந்தியர் என்னும் நம் பெயரைப் பயன்படுத்திதான் நம் அரசால் கொலை செய்யப் படுகிறார்கள். இந்தப் போராட்டத்தில் நாங்கள் தனித்துவிடப்படுவதை இந்திய அரசு விரும்புகிறது. அப்படி ஆக்கக்கூடா தென நாங்கள் விரும்புகிறோம். ஆகவே, போராடிக்கொண்டிருக்கும் எங்கள் சகோதரர்களுக்கு உங்கள் ஆதரவும் உள்ளதென மத்திய அரசுக்குத் தெரியப்படுத்துங்கள். அரசுகளில் அங்கம் வகிக்கக்கூடிய உங்கள் தேசிய இனங்களைச் சேர்ந்தவர்களை எம் கரத்தை பலப்படுத்துவ தோடு, எதிர்காலத்தில், ஒரு நவநிர்மாண் சேனாவோ, ஸ்ரீராம் சேனாவோ தமிழ்நாட்டில் உருவா கவிருக்கும் ஆபத்தைத் தவிர்க்கும் என்பது என் கருத்து.

**தமிழ்நாடு காவல்துறையிலிருக்கும் இளைஞர்களே!**

உங்கள் மீது எனக்கு இருக்கும் மதிப்பு கொஞ்சம் நஞ்சமல்ல, காரணம், தமிழுக்காக மற்றவர்கள் என்ன செய்தார்களோ, அலுவலர்களை ஐயா என அழைப்பது போன்ற நடைமுறை ரீதியில் தமிழை வாழ வைத்துக்கொண்டிருப்பவர்கள் நீங்கள்தான். மக்களுக்காகப் பாடுபடவேண்டும், சமூக விரோதிகளை ஒழித்துக்கட்ட வேண்டும் என்பதுபோன்ற உன்னத நோக்கங்களுக்காகத் தான் நீங்கள் காவல்துறையில் இணைந்திருப் பீர்கள் என்று நம்புகிறேன். ஆனால், அதை செய்ய விடுகிறதா ஆளும் வர்க்கம்? உங்களை சிறுசிறு தவறுகள் செய்ய விடுவதன் மூலம் தன்னுடைய பெருந்தவறுகளை மறைத்துக்கொள்ளும் அதிகார வர்க்கம், உங்களை, எந்த மக்களுக்காகப் பாடுபட நீங்கள் விரும்பினீர்களோ, எந்த மக்களுக்காக உயிரையும் கொடுக்கலாம் என்று தீர்மானித்தீர்களோ, அந்த மக்களுக்கெதிராகவே, பயிற்றுவிக்கப்பட்ட அடியாள்களாக மாற்றுகிறது. டெல்லி திகார் ஜெயிலைப் பாதுகாப்பது தமிழக போலீஸ்தான். இந்தியாவில் பழமையான காவல் துறையான தமிழக காவல்துறை சிறப்பாக செயல்பட்டு வரும் காவல்துறைகளில் ஒன்று. ஆனால் அந்த மதிப்பை உங்களுக்குக் கொடுக்கிறதா இந்திய அரசாங்கம்! மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் தமிழகம் வந்து திரும்பிப்போகையில், சென்னை விமான நிலையத்தில், அவருக்கான பாதுகாப்பை வழங்க அனுமதிக்க மறுத்திருக் கிறார்கள் மத்திய காவல் அதிகாரிகள். ஏனென்று கேட்டதற்கு, ராஜீவ் காந்தியை நீங்கள் பாதுகாத்த லட்சணம் தான் தெரியுமே என்று கிண்டல் செய்திருக்கிறார்கள். ராஜீவ்காந்தியைத் தமிழக காவல்துறையால் காப்பாற்ற முடியவில்லை என்பது எவ்வளவு உண்மையோ, அதே அளவுக்கு உண்மை, ராஜீவோடு இறந்தவர்களில் பலர் அப்பாவி போலீஸ்காரர்கள் என்பது. உங்கள் அர்ப்பணிப்புணர்வு கேள்விக்காப்பாற்பட்டது. ஆனால் மேற்படி வெண்ணெய் வெட்டி வீரரர்கள் - அதுதான், இந்திய உளவுத்துறை - ராஜீவின் உயிருக்கு ஆபத்து இருக்கிறது என்ற தகவலை அறிந்தபோதும் மெத்தனமாக இருந்தது என்பது பின்னர் அம்பலமானதல்லவா... இதுவரை காலமும் நீங்கள் அப்பாவி மக்களுக்கெதிராக இருந்தாலும் தமிழகத்தின் பெருமைகளில் ஒன்றாகத்தான் இருக்கிறீர்கள். வரலாற்று முக்கியத் துவம் வாய்ந்த இந்த தருணத்தில், நீங்கள் மக்கள் பக்கம் இருந்தால் மட்டுமே மக்களிடம் இழந்திருக்கிற பெருமையை மீட்டெடுக்க முடியும். ஒருமுறை சக தமிழர்களுக்காக அர்ப்பணித்துப் பாருங்கள். மக்கள் உங்களை தங்கத்தட்டில் வைத்து தாங்குவார்கள். தமிழனின் நன்றி உணர்ச்சி அளவிடற்கரியது. தன்னுடைய சொந்தக்காசை வைத்து அணை கட்டிக்கொடுத் தான் என்பதற்காகவே அவனுக்கு கோயில் கட்டி. தன் பிள்ளைகளுக்கு அவன் பெயரை வத்துக் கொண்டாடிக்கொண்டிருக்கிறான் முல்லையாற்றின் மதுரை மாவட்டத்தமிழன். நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம், கொந்தளிக்கப் போகும் தமிழகத் தில், மத்திய அரசு அதிகரிகளுக்கு ஒத்துழைக்க மறுப்பது, ரா, சி.பி.ஐ போன்ற அமைப்புகளைச் சேர்ந்தவர்களை உள்ளூர் மக்களுக்கு அடையா ளம் காட்டுவதும்தான். இதை மட்டுமாவது செய்யுங்கள். மற்றதை மக்கள் பார்த்துக்கொள் வார்கள்.

**களத்தில் நிற்கும் தமிழீழ மக்களே, விடுதலைப் புலிகளே....**

அனைத்துக்கண்களும் இப்போது முல்லைத்தீவை நோக்கி. தாய்த் தமிழகம் உணர்வுபூர்வமாக உங்கள் பக்கம்தான் நிற்கிறது. வேறு ஏதாவது செய்ய வேண்டும் எனவும் விரும்புகிறது. ஆனால் என்ன செய்வது உங்களுக்கு அமைந்தது போன்ற உன்னத தலைவன் எங்களுக்கில்லையே... ஆனால், நம்பிக்கையை மட்டும் கைவிடாதீர்கள். இதுபோன்ற கையறுகாலங்கள் தான். தமிழகத்திலிருந்து அப்படி ஒருவர் இந்தக் காலத்தில் உருவாகலாம் அதுவரை, புலிகளின் கரங்களை பலப்படுத்துங்கள். 1965ல் நடந்த இந்தி எதிர்ப்புப் போரை சில சுயநலமிகளின் கையில் ஒப்படைத்ததால்தான் தமிழக வரலாறு கற்காலத்திற்கு இழுபட்டுள்ளது. அந்தத் தவறை நீங்கள் செய்து விடாதீர்கள்.

**அன்பிற்குரிய சர்வதேச சமூகமே, நம்பிக்கைக்குரிய ஒபாமாவே,**

உங்கள் மீது எங்களுக்கு இன்னும் நம்பிக்கை இருக்கிறது. ஆனால், இறையான்மை கொண்ட ஒரு குடியரசு தம் குடிமகனை இனஒதுக்கல் மூலமாக கொடுமைப்படுத்தாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் கிடையாது. வசதிக்காக அமெரிக்காவின் கடந்த காலத்தையே எடுத்துக்காட்டாக சொல்லலாம். உலகப்புகழ் பெற்ற குத்துச் சண்டை மாவீரன் முகமதலி சொன்னானே, என் சருமத்திலிருக்கும் கொஞ்ச வெண்மையும் கற்பழிப்பின் மூலமாகவே வந்திருக்குமென்று... நீங்கள் அமைதியாக இருக்கும் வரை இந்தியா வாயே திறக்காது. ஒட்டுமொத்த தமிழர்களும் அழிக்கப் பட்ட பிறகு வேண்டுமானால் அது நடக்கும். அது வரை, இந்தியாவின் வாயைப் பார்த்துக்கொண்டிருக்கப் போகிறீர்களா? வன்னியில், விடுதலைப்புலிகளூக்கு எதிரான போர்தான் நடக்கிறது என்கிறார்கள். புலிகள் மக்களைக் கேடயமாகப் பயன்படுத்துகிறார்காள் என்கிறார்கள். அப்படியானால் அரசு சொன்ன பகுதிக்கு வந்த மக்களை ஏன் கொலை செய்தார்கள்? இது ஒன்று போது மே, தமிழ்மக்கள் விடுதலைப்புலிகளைச் சார்ந்து நின்றாலும் சரி, இலங்கை அரசைச் சார்ந்து நின்றாலும் சரி, தமிழர்கள் என்ற காரணத்திற்காகவே அவர்கள் கொல்லப்படுகிறார்கள் என்பதற்கு. இது இனப்படுகொலை இல்லையா? இந்தியா, பாகிஸ் தான், சீனா ஆயுதம் கொடுத்தும், ஜப்பான் பணம் கொடுத்தும், கூடுதலாக, இந்தியா நாட்டாமை செய்தும் தமிழர்களைக் கொள்கின்றனரென்றால். நீங்கள் உங்கள் மௌனத்தின் மூலமாகவும், பாராமுகத்தின் மூலமாகவும் அதே கொலையைத் தான் செய்துகொண்டிருக்கிறீர்கள் என்பதை ஏன் உணரவில்லை? ஆயுதம் தாங்கி போராடுவதால் மட்டுமே யாரும் தீவிரவாதியாகிட மாட்டார்கள். அறத்திற்கே அன்பு சார்பென்ப அறியார். மறத திற்கும் அஃதே துணை என்று பாடியுள்ளான் எங்கள் திருவள்ளூவர்.

புலிகள் ஆயுதங்களைக் கீழே போட வேண்டும் என்கிறார் ஜெயலலிதா - என்னவோ பிரச் சினையே புலிகள் ஆயுதம் அடுத்ததால்தான் வந்தது என்பதைப் போலெ.. உணமையில், புலிகள் தமிழீழ இன அழிப்பிலிருந்து உருவாகி வந்தவர்களே தவிர, காரணகர்த்தாக்கள் அல்லர்(They are not the reason: just an outcome)

இந்திய அரசு இந்தப் பிரச்சினையில் ஈடுபட்டிருப்பது வெளிப்படையாகாத வரை, இலங்கைப் பிரச்சினை உள்நாட்டுப் பிரச்சினை. அதில் தலையிட முடியாது என்றது. சீனா, பாகிஸ்தான் அமெரிக்கா போன்ற நாடுகள் இலங்கையில் ஆதிக்கம் பெறுவதைத் தடுப்பதற்காக செய்வதாகச் சொன்னது. நாடாளுமன்றத்தில் தாக்குதல் நடத்திய, மும்பை தொடர்வெடிகுண்டுகள், பிறகு அண்மையில் நடந்த தாக்குதல் எனப் பலவாறாக இந்திய மக்களைக்கொன்று குவித்த பாகிஸ்தானோடு இணைந்து கொண்டு தமிழர்களைக் கொண்று குவிக்கிறது. அப்படியானால், பாகிஸ்தானின் இந்தியா மீதான பயங்கரவாதமென்பது, இந்தியா-பாகிஸ்தான் இருதரப்பு அதிகார வர்க்கங்களும் தங்கள் மக்களைச் சுரண்ட பரஸ்பர புரிதலுடன் உருவாக்கிக் கொண்ட ஒன்று என்ற எம் சந்தேகம் ஒருபக்கம் இருக்க, இப்போது, விடுதலைப்புலிகள் தீவிரவாதிகள் அதனால்தான் சண்டை என்கிறது. ராஜீவ் காந்தியைக் கொன்றார்கள் என்கிறது. ராஜீவ்காந்தி ஒரு கவுன்சி லரோ, மாவட்டச் செயலாளரோ அல்ல. அவ்ரை ஏற்கனவே ஒருமுறை கொலை செய்யும் முயற்சி இலங்கையில் நடைபெற்றிருந்த போதும் அந்தக் கொலைகாரன் விசாரிக்கப்படவில்லை. ராஜீவ் காந்தியைக் கொல்ல முயன்ற அந்த சிங்கள வீரன் ஆகியோரையும் குற்றம் சாட்டப்பட்டவர்களாக இணைத்துக்கொண்டு மறுபடியும் விசாரிக் கப்பட வேண்டும் என்பது என் கோரிக்கைகளில் ஒன்று. ராஜீவ் மீது புலிகளுக்கு வருத்தம் இருந்திருக்கலாமே தவிர, கோபம் இருந்திருக்க வாய்ப்பில்லை. காரணம், ராஜீவ் இந்திராவின் புதல்வர். இந்திரா, தமிழீழத்தின் சிறுதெய்வங் களில் எம்.ஜி.ஆருக்குப் பக்கத்திலிருப்பவர்.

இந்தியா சொல்லும் காரணங்கள் அடிக்கடி மாறுவதிலிருந்தே இந்தியா நியாயத்திற்குப் புறம் பாகத்தான் இந்தப்போரில் ஈடுபட்டிருப்பது அம்பலமாகி இருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு சூழலில் நீங்கள் ஏன் நேரடியாகத் தலையிடக் கூடாது? புலிகள் போர்நிறுத்தத்தைப் பயன்படுத்தி ஆயுதம் குவிக்கிறார்கள் என்றது இலங்கை. சந்திரிகாவோ, ரணிலோ, மகிந்தாவோ கடந்த காலங்களில் ஒரு கடவுளாக அல்ல, மனிதர்களாகக்கூட நடந்துகொண்டதில்லை. இவர்கள் ஒரு நிர்பந்தத்தின் பெயரில் போர் நிறுத்தத்திற்கு ஒப்புக்கொண்டுவிட்டார்கள். என்பதால் மட்டுமே போராளிகள் ஆயுதங்களை ஒப்படைத்துவிட வேண்டும். புனரமைப்புப் பணிகளில் ஈடுபடக்கூடாது என்று எதிர்பார்ப்பது என்னவகை நியாயம்? தாங்கள் நேர்மையாக நடந்துகொள்வோம் என்ற நம்பிக்கையை உண்டாக்குவது மூலமாக மட்டு மே போராளிகளை- ஆயுதத்தைக் கீழே வைக்கச் செய்ய முடியும். கடந்த கால அரசுகள் எவையும் அப்படி செயல்படவில்லை.

**உதாரணம் ரணில்- கருணா.**

ஆனால், புலிகள் போர்நிறுத்தத்தைப் பயன்படுத்திக்கொண்டு செய்தது ஆயுதம் வாங்கியது மட் டுமல்ல, அது காலாகாலமாக நடப்பதுதானே- ஓர் அரசு நிர்வாகத்தையே உருவாக்கியுருக்கிறார்கள். சர்வதேசத்தின் கண்களில் இது தீவிரவா தமா? அப்பாவித்தமிழர்களைக் காப்பதற்காகத் தான் போரிடுவதாக பசப்புகிறது இந்தியா. ஆயுத தளபாடங்களும், உளவு விமானங்களும்தான் இலங்கை போகின்றனவே தவிர, இந்தியாவால் அனுப்பப்பட்ட ஒரு பாராசெட்டமால் மாத்திரையைக் காட்டச் சொல்லுங்கள் பார்க்கலாம். இந்த லட்சணத்தில், தமிழீழ மக்களுக்கான வசதிகளை இலங்கை அரசு செய்யுமாம். அதற்கு இந்தியா

உதவுமாம்... வேலிக்கு ஓணான் சாட்சி! இப்போ து சர்வதேச செஞ்சுலுவைச் சங்கத்தின் ஆம்பு லன்ஸ்களைத் தாக்கினார்களே, அவர்களும் விடு தலைப்புலிகளா? ப்ரான்சின் 17 மனித உரிமையா ளர்களைக் கொலை செய்தார்களே, அவர்களும் விடுதலைப்புலிகளா? சீனாவின் டாங்கிகள், இந்தி யாவின் உளவு விமானங்கள், பாகிஸ்தானின் ஆர்டிலரிகள் மட்டுமல்ல... இப்போது எம்மக்களைக் கொலைசெய்து வருவது சர்வதேச சமூகத்தின் மௌனமும்தான் என்பதை எப்போது உணர்வீர்கள்? நியாயத்தின்பால் பெருவிருப்பு கொண்ட ஒரு மக்கள் சமூகம் பூமியிலிருந்து முற்றாகத் துடைத்தழிக்கப்பட்ட பிறகா? அபாரிஜின்கள், மாயா, இன்கா வரிசையில் நாங்களும் சேர்க்கப்படுவது உங்கள் நோக்கமென்றால், எங்கள் பழங்கதைகள் ஒன்றின்படி ஒவ் வொருநாளும் ஏதேனும் ஒரு வீட்டிலிருந்து ஒருவர் வந்து உங்கள் முன்னால் தற்கொலை செய்து கொள்கிறோம்... எங்கள் சகோதரிகளையும், குழந்தைகளையும் விட்டுவிட்டுச் சொல்லுங்கள். தாங்க முடியவில்லை. இவர்களெல்லாம் மனமார சிரிப்பதை ஒருநாள் பார்ப்போம் என்ற நம்பிக்கையில்தான் நாங்கள் போராடிக் கொண்டிருப்பதே. ஒரு பேச்சுக்கு ஒத்துக கொள்வதென்றாலும் கூட, விடுதலைப்புலிகள் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் என்றாலும் அப்படி ஒரு தண்டனையை வழங்கும் யோக்கியதை இந்தியாவுக்கோ, இலங் கைக்கோ கிடையாது.

**காலம் கடந்து வழங்கப்படும் நீதி அநீதியைவிடக் கொடுமையானது.**

-எனது பதினான்கு அம்சக் கோரிக்கைகள்-

1. இந்தியா உடனடியாக தமிழீழத்தின் பகுதிகளிலிருந்து தன் துருப்புகளைத் திரும்பப் பெற்றுக்கொள்வதோடு, மேற்கொண்டு செயற்கைக்கோள் உதவிகள், ராடார் போன்ற உதவிகளைச் செய்யக்கூடாதென்று சர்வதேச சமூகத்தால் கண்டிக்கப்பட வேண்டும். இலங்கையோடு இந்தியா அரசு நடந்தும் முக்கியத்துவமற்ற பேச்சுப்பரி மாற்றங்கள்கூட சர்வதேச சமூகம் மூலமாகவே நடக்க வேண்டும். தமிழக மக்களிடமும், உலகெங்கும் பரந்து வாழும் தமிழீழத்தாரிடமும் இந்தியா பகிரங்க மன்னிப்பு கோர வேண்டும்.

2. ஐநா பொதுச்செயலாளரான பான் கி மூன், தொடர்ந்து தன் தாயகமான சீனாவிற்கு ஆதரவான நிலைப் பாட்டிலிருந்து, ஒருதலைப்பட்சமாக செயல்பட்டு வரு வதால், ஈழம் தொடர்பான முடிவெடுக்கும் அதிகாரம் அவருக்கு வழங்கப் படக்கூடாது.

3. இலங்கை அரசு எந்தெந்த நாடுகளிடமெல்லாம் கோரப்பட்டு புலிகள்மீது தடை விதிக்கப் பட்டதோ அந்தந்த நாடுகளில் புலிகள் மீதான தடை நீக்கப்பட்டு, தடை செய்யப்பட்ட அமைப் பின் உறுப்பினர் என்ற குற்றத்திற்காக சிறையிலிருக்கும் அதன் உறுப்பினர்கள் எதுவித நிபந்தனையுமற்று உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும்.

4. புலிகளின் உறுப்பினர்கள் மீதான பாஸ்போர்ட் தொடர்பான குற்றங்கள் மன்னிக்கப்பட்டு, அவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும்.

5. புலிகளோடு தொடர்புடையது என்னும் குற்றச் சாட்டின் பேரில் தடை செய்யப்பட தொழில் நிறு வனங்களின் உரிமம் மீண்டும் அளிக்கப் படுவ தோடு, தக்க நட்ட ஈடும் வழங்கப்பட வேண்டும்.

6. ராஜீவ்காந்தி கொலை வழக்கு இண்டர்போ லால் விசாரிக்கப்பட்டு, உண்மையான குற்றவாளி கள் இனம்காணப்பட வேண்டும்.

7. பிரணாப் முகர்ஜி, கோத்தபாய ராஜபக்க்சேஷ, சந்திரிகா, உதயணகார, கேகலிய ரம்புக்வெல, பசில்ராஜப்க்ஷ மகிந்த, பொன்சேகா போன்றோர் நார்கோ அனிலிசிஸ் சோதனைக்குப்பட வேண்டும்.

8.அமைக்கப்படபோகிற தமிழீழத்தை அங்கீகரிக்கிற உரிமையை மட்டுகே சர்வதேசம் மேற்கொள்ளலாமே தவிர, அது யாரின் தலைமையில் அமையவேண்டும என்பதை தமிழீன மக்கள் தான் முடிவுசெய்வார்கள்

9. புலிகள் கை பலவீனமான நேரத்தில், மலையக மக்கள் மீது நடந்த வந்தாக்குதல், எதிர்காலத்தில் அப்பகுதிகளில் மீண்டும் ஒரு பாரிய இன அழிவு ஏற்படுத்தப்படுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்தியிருப்பதால், மலையக மக்கள் தமிழீ ழத்தோடு இணைய விரும்புகிறார்களா என்பதை வாக்கெடுப்பு மூலம் அறிந்து அதன்படி செயல்பட வேண்டும் இந்த விசயத்தில் மலையக மக்களின் முடிவே இறுதியானது.

10. சென்னையில், குடிபோதையில் அப்பாவித் தமிழர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து, நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட டக்ளஸ் தேவானந்தாவின் தண்டணைக்காலம் பூர்த்தியாகும் காலத்திற்கும் இலங்கைக்குத் தப்பிச்சென்று விட்டதால், அவர் கைது செய்யப்பட்டு, தமிழக போலிசார் வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

11. பத்திரிகையாளரான லசந்தவின் கொலைக்குக் காரணமான அனைவரும் தண்டிக்கப்பட வேண்டும்.

12. தமிழ்நாட்டிற்கு தஞ்சம் புகுந்திருக்கும் சிங்கள பத்திரிகையாளர்களுக்கு தகுந்த பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்.

13.தமிழ்நாட்டிற்கு அகதிகளோடு அகதியாக வந்த சிங்களத்தம்பதியர் மீதான பாஸ்போர்ட் குற்றச் சாட்டு நீக்கப்பட்டு, அவர்களும் அகதிகளாக அங்கீகரிக்கப்பட வேண்டும்.

14. சுட்டுக் கொலை செய்யப்பட்ட தமிழக மீனவர்களின் குடும்பங்களுக்கான வாழ்வாதரங் கள் உறுதி செய்யப்பட வேண்டும்.

என்றும் அன்புடன்,

அநீதிகளுக்கெதிரான உங்கள் சகோதரன்,
கு.முத்துக்குமார், 67ஃ191இ திருவள்ளுவர் தெரு, மக்காரம் தோட்டம், கொளத்துர், சென்னை-99,9380927441

அருமைத் தமிழ் மக்களே, அநீதிகளுக்கெதிரான போராட்டத்தில் நம் சகோதரர்களும், பிள்ளைகளும் அறிவாயுதம் ஏந்தியிருக்கிறார்கள். நான் உயிராயுதம் ஏந்தியிருக்கிறேன். நீங்கள் நகலாயுதம் ஏந்துங்கள். ஆம், உங்கள் கையில் கிடைத் திருக்கும் இந்தத் துண்டறிக்கையை நகலெடுத்து, உங்கள் நண்பர்கள், உறவினர்கள், மாணவர்கள் வசம் கொடுத்து,



# 15.05.1985 குமுதினிப் படுகொலை நினைவுகளுடன்

யாழ். தீபகற்பத்தின் தனித்துவமானதும், நான்கு பக்கங்களும் கடலாற் சூழப்பட்டதும், 47.4 சதுர கி.மீ நிலப் பரப்பில் நெடுந் தீவுப் பிரதேசம் அமைந்துள்ளது. தீவுகளில் பெரும் விசாலமான நிலப்பரப்பைக் கொண்ட இப்பிரதேசத்தில் ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வந்தார்கள். நெடுந்தீவில் வாழும் மக்கள் தமது அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றக் கடல் கடந்த படகுகளில் யாழ் நகருக்கு வரவேண்டியதால், அவர்கள் நாளாந்தம் தமது தேவைகளை நிறைவேற்றப் படகுகளில் பிரயாணம் செய்வது தவிர்க்க முடியாத விடயமாக




அமைந்தது. நெடுந்தீவு மக்களின் கடற் போக்குவரத்திற்கு குமுதினிப்படகுச் சேவையே பெரிதும் உதவியது. இப்படகுச் சேவை நாளாந்தம் காலை 7:00 மணிக்கு நெடுந்தீவுத் துறைமுகத்திலிருந்து குறிகட்டுவானுக்கும் பின்னர் மாலை 5:00 மணிக்குகுறிகட்டுவானிலிருந்து நெடுந்தீவுத் துறைமுகத்துக்கும் பயணிக்கும்.

1985ஆம் ஆண்டு மே மாதம் பதினைந்தாம் திகதி குமுதினப் படகு வழமைபோல் தனது சேவையை ஆரம்பித்தது. அன்று ஏறக்குறைய அப்படகில் அறுபதிற்கும் மேற்பட்ட பயணிகள் பிரயாணம் செய்தார்கள். நெடுந்தீவுத் துறைமுகத்திலிருந்து குறிகட்டவான் நோக்கி வந்து கொண்டிருந்த சமயம் நயினை நாகபூசணி அம்மன் ஆலயம் அமைந்துள்ள நயினாதீவில் முகாமிட்டிருந்த சிறீலங்கா சிங்கள கடற்படையினரின் இரண்டு பீரங்கிகள் பொருத்தப்பட்ட விசைப்படகுகள் குமுதினிப் படகினை அண்மித்தபோது அதில் பயணித்த மக்கள் அச்சம்கொள்ளத் தொடங்கினர். அவ்விரண்டு விசைப்படகுகளில் சிறீலங்கா சிங்கள கடற்படையினர் தங்களுடன் கோடரி, கத்தி, அரிவாள் போன்ற கூரிய ஆயுதங்களையும் எடுத்து வந்திருந்தனர். இதைப் பார்த்த மக்கள் செய்வதறியாது கதறி அழுதார்கள். வந்த சிங்கள கடற்படையினர் குமுதினிப் படகினுள் மூன்றுமாதக் குழந்தை உட்பட அனைத்துப் பயணிகளையும் ஒவ்வொருவராகக் கீழ்த்தளத்திற்கு அழைத்து மற்றவர்கள் அறியாமல் தாங்கள் எடுத்து வந்த கூரிய ஆயுதங்களினால் வெட்டிக் கொன்றனர். சிங்கள கடற்படையின் இத் தாக்குதலில் நாற்பத்திரண்டிற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தார்கள். இருபத்தைந்திற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தார்கள். காயமடைந்தவர்களில் பெரும்பாலானவர்கள் தமது அங்கங்களை இழந்தார்கள். இவர்கள் அனைவரும் மாலை கரையொதுங்கிய குமுதினிப் படகிலிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்கள்.






# குருந்தூர்மலை, முல்லைதீவு இராணுவப் பாதுகாப்புடன் பௌத்த மயமாக்கல் தீவரம்



தமிழர்களின் பூர்வீக முல்லைத் தீவு – குருந்தூர் மலைக்கு, கடந்த 10.05.2021 அன்றிலிருந்து பௌத்த பிக்குகள், இராணுவத்தினர், உள்ளிட்ட பலரும் பாரிய அளவில் செல்வதாகவும் அங்கு பாரிய அளவில் நிகழ் வொன்று இடம் பெறுவதற்கான ஆயத்தப் பணிகள் இடம் பெறுவதாகவும் அப்பகுதி மக்கள் தெரியப் படுத்தியிருந்தனர்.

அத்தோடு என்றுமில்லாதவாறு ஆறுமுகத்தான் குளம், தண்ணிமுறிப்புப் பகுதிகளில் இராணுவம் பாதுகாப் புக்கடமைகளில் ஈடுபடுவதாகவும், அவ்வாறு பாதுகாப் புக்கடமையிலுள்ள இராணுவத் தினர் குரந்தூர் மலையை அண்டிய பகுதிகளிலுள்ள வயல் நிலங்களுக்கு செல்பவர்களை வழிமறிப்பாதகவும் மக்களால் மேலும் தெரியப்படுத் தப்பட டுள்ளது.

இந் நிலையில் 11.05.2021 அன்று முன்னாள் வட மாகாணசபை உறுப்பினர் திரு. துரைராசா ரவிகரன் அவர்கள் மற்றும், கரைத்துறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் திரு. சின்னராசா லோகேஸ் வரன் ஆகியோர் அங்குள்ள நிலைமை களைப் பார்வையிட்டனர்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், குருந்தூர்மலையில் 10.05.2021 அன்று இரவு தொடக்கம் ஏதோ இடம்பெறுகின்றது என அப்பகுதிமக்கள் என்னிடம் முறையிட்டிருந்தனர். குறிப்பாக குமுழமுனை, ஆறுமுகத்தான்குளம் மற்றும் தண்ணி முறிப்பு வயல்களில் வேலைசெய்கின்ற பொதுமக்கள் எனப் பலராலும் எங்களுக்கு இந்த முறைப்பாடுகள் கிடைத்தன.

இந்நிலையில் 10.05.2021 அன்று இரவு உடனேயே செல்லமுடியாத நிலையில், 11.05.2021 அன்று குருந்தூர்மலைக்குச் சென்றிருந்தோம்.

அங்கு குருந்தூர்மலைக்குச் செல்லும் வழியில் இறுமுகத்தான் குளத்திலிருந்து கிட்டத்தட்ட நான்கு இடங்களில் சிங்கள இராணுவத்தினர் இரவா அல்லது வீதம் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அத்தோடு குருந்தூர் மலைக்கு நுழையும் வீதியில் குருந்தூர் மலைக்கு அண்மையில் பாதுகாப்புக்கடமையில் ஈடுபட்டிருந்த இரு சிங்கள இராணுவத்தினர் எம்மை அங்கு செல்லவிடாது தடுத்திருந்தனர்.

இந் நிலையில் நாம் குருந்தூர் மலைக்குச் செல்லவேண்டும் என அந்த சிங்கள இராணுவத்தினரிடம் வலியுறுத்தியந்த நிலையில், குறித்த இராணுவத்தினர், தொலைபேசி அழைப்பு ஒன்றின் ஏற்படுத்திவிட்டு உள்ளே செல்வதற்கு அனுமதித்திருந்தனர்.

அங்கு தொல்லியல் திணைக்களகத்தினரும், அதிகளவான இராணுவத்தினரும் குவிக்கப்பட்டிருந்தனர். அங்கு 10.05.2021 அன்று பரிய அளவில் நிகழ்வு ஒன்று இடம்பெற்றமை குறித்தும் அங்கிருந்த இராணுவத் தினரிடம் கேள்வி எழுப்பியிரந்தோம். பௌத்த பிக்குகளும், வழிபாடுகளுக்குரியவர்களும், இராணுவத்தினரும் தான் அங்கு வருகைதந்ததாக இராணுவத்தினர் பதிலளித்திருந்தனர்.

இந்திலையில் நாங்கள் மாலை அடிவாரத்திலிருந்து, குருந்தூர் மலையின் மேற்பகுதிக்குச் செல்லவேண்டும், அங்கு நம் எமது வழிபாடுகளை மேற்கொள்ளவேண்டும் எனக் கேட்டபோது அவர்கள் அதற்கு மறுப்புத் தெரிவித்தார்கள். குருந்தூர் மலையின் மேற்பகுதிக்குச் செல்லவேண்டமானால் தொல்லியல் திணைக்களகத் தினுடைய அனுமதி பெறப்படவேண்டும் எனவும், அவ்வாறு அனுமதி பெற்றுவந்தால் மலையின் மேற்பகுதிக்குச் செல்ல அனுமதிப்பதாகத் தெரிவித்தனர்.

இந்த விடயத்திலே குறிப்பாக, முல்லைத்தீவு எனப்து தமிழர்களுடைய இடமாகும். இதிலே குருந்தூர் மலையானது எங்களுடைய தமிழ் மக்களுக்குரிய மலையாகும். இங்கு எமது தமிழ் மக்கள் பூர்வீகமாக ஐயனார் வழிபாடுகளைச் செய்ததுடன், குருந்தூர் மலையின் அண்டிய பகுதிகளில் எமது தமிழ் மக்கள் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளையும் செய்து வருகின்றனர்.

அவ்வாறு பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ளும் எமது தமிழ் மக்களுக்குகுருந்தூர் மலையில் உள்ள ஐயனார் காவல் தெய்வமாக இருக்கின்றது. என எமது தமிழ் மக்கள் நம்புகின்றனர்.

இப்படியாக தமிழர்களின் பூர்வீக குருந்தூர்மலையை, சிங்கள மயப்படுத்தத் தீவரப்படுத்தியிருக்கின்றார்கள்.

அதேவேளை குருந்தூர் மலையில் இடம்பெறும் அகழ்வாராட்சி நடவடிக்கைகளில், யாழ் பல்கலைக்கழக தொல்லியல் துறை சார்ந்தவர்களும் சேர்த்துக் கொள்ளப்படவேண்டும் என்று நீதிமன்றால் வழங்கப்பட்ட கட்டளை இங்கு மீறப்பட்டுள்ளது. இந்நிலையல் மலையின் மேற்பகுதிக்குச் செலவதற்கு எமக்கு அனுமதி மறுக்கப்பட்டதால், அங்கு என்ன நடவடிக் கைகள் வேற்கொள்ளப்டுகின்றன என்பதையும் அறிய முடியாதுள்ளது என்றார்.






# ஒன்ராறியோவில் தமிழ் இனப்படுகொலை கல்வி வாரமாக அறிவித்து ஸ்கார்பாரோ எம்.பி.பியின் மசோதா நிறைவேறியது




வியாழன், மே 6, 2021

ஸ்கார்பாரோ-ரூஜ் பார்க் எம்.பி.பி விஜய் தனிகசலத்தின் மசோதா 104, ஒன்ராறியோவில் ஒரு தமிழ் இனப்படு கொலை நினைவு நாள் மற்றும் ஒரு தமிழ் இனப்படு கொலை கல்வி வாரத்தை அங்கீகரிக்கும் செயல், சட்டமன்றத்தில் மூன்றாவது வாசிப்பை நிறைவேற்றியுள்ளது.

ஸ்கார்பாரோ எம்.பி.பியின் தனியார் மசோதா சட்டமன்றத்தில் மூன்றாவது வாசிப்பை நிறைவேற்றியதால், மே 6 அன்று ஒன்ராறியோ இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலையை அங்கீகரித்த உலகின் முதல் அதிகார வரம்புகளில் ஒன்றாகும்.

மசோதா 104, தமிழ் இனப்படுகொலை கல்வி வாரச் சட்டம், ஒவ்வொரு ஆண்டும் மே 11 முதல் 18 வரை ஏழு நாட்களை நிறுவுகிறது, இதன் போது ஒன்டேரியர்கள் "தங்களைத் தாங்களே கல்வி கற்பிக்கவும், உலகில் நிகழ்ந்த தமிழ் இனப்படுகொலை மற்றும் பிற இனப்படுகொலைகள் பற்றிய விழிப்புணர்வைப் பராமரிக்கவும் ஊக்குவிக்கப படுகிறார்களா வரலாறு.

"ட்விட்டரில், ஸ்கார்பாரோ-ரூஜ் பார்க் எம்.பி.பி விஜய் தானிகசலம் தனது மசோதாவை "ஒன்ராறியோவிலும் உலகெங்கிலும் உள்ள தமிழ் மக்களுக்கு ஒரு வரலாற்று நிகழ்வு" என்று நிறைவேற்றினார்.

முற்போக்கு கன்சர்வேடிவ் எம்.பி.பி - இலங்கையில் பல தசாப்தங்களாக நீடித்த உள்நாட்டுப் போரிலிருந்து தப்பி ஓடியவர், அவரது மசோதா அதன் தமிழ் மக்களுக்கு எதிரான இனப்படு கொலை என்று விவரிக்கிறது - இதுபோன்ற ஒரு சட்டத்தை இயற்றிய முதல் அரசாங்கம் ஒன்ராறியோ என்றார்."இனப்படு கொலை" என்ற வார்த்தையை இலங்கை - கனடியர்கள் ஆட்சேபித்தனர் - 2009 மே 18 அன்று தமிழீழ விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டதன் மூலம் முடிவடைந்த மோதலுக்கு கனடாவும் ஐக்கிய நாடுகளும் பொருந்தவில்லை - மற்றும் எம்.பி.பிக்கள் தேர்ச்சி பெற வேண்டாம் என்று வலியுறுத்தினர். இந்த மசோதா, ஆனால் தமிழ்-கனேடிய குழுக்கள் அதை ஆதரித்தன.

2019 ஆம் ஆண்டில் இரண்டாவது வாசிப்பில் தேர்ச்சி பெற்றதிலிருந்து காத்திருந்த பில் 104, மே 5 அன்று ஒழுங்குமுறைகள் மற்றும் தனியார் ம சோதாக்கள் தொடர்பானநிலைக்குழுவில் தோன்றியது. இது மறுநாள் மூன்றாவது சட்டமன்ற வாக்கெடுப்புக்கு வைக்கப்பட்டது.

தமிழ் இனப்படு கொலையை ஒப்புக்கொள்வதற்கான முதல் அதிகார வரம்பாக ஒன்ராறியோ ஒரு உரத்த மற்றும் தெளிவான செய்தியை அனுப்புகிறது" என்று கனேடிய தமிழ் இளைஞர் கூட்டணியின் பிரச்சாரங்களின் துணைத் தலைவர் சிந்துகன் சண்முகலிங்கம் கூறினார், ஒரு குழு அரசியல்வாதிகளுடனான சந்திப்புகள் மற்றும் மசோதாக்கள் 104 ஐ நிறைவேற்றுவதற்காக சம்முகலிங்கம் கூறினார். 2019 முதல் மின்னஞ்சல் மற்றும் கடித பிரச்சாரங்கள்."இந்த மசோதா நிறைவேற்றப்படுவதன் மூலம், தமிழர்கள் குணப்படுத்தும் செயல்முறையைத் தொடங்கலாம், மேலும் தமிழ் இனப்படுகொலை மற்றும் உலகெங்கிலும் நிகழ்ந்த பிற இனப்படுகொலைகள் பற்றி அறிய ஒன்டேரியர்களை ஊக்குவிக்க முடியும்."

[redacted]

## 'தமிழினப்படுகொலை அறிவூட்டவாரம்' சட்டம் நிறைவேள்றப்பட்டது

மே 12, 2021 - இன்று கனடாவின் ஒன்ராரியோ மாகாணத்தில் 'தமிழினப் படுகொலை அறிவூட் டல் வாரம்' தொடர்பாக சட்டமன்ற உறுப்பினர் விஜய் தணிகாசலமினால் சமர்பிக் கப்பட்டிருந்த சட்ட முன்வரைவு Bill 104, ஏற்கனவே இம்மாதம் 06 ஆம் நாள் குயின்ஸ் பார்க் ஒன்ராரியோ சட்டமன்றத்தில் ஏகமனதாக அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிலையில் இன்று மகாராணியின் பிரதிநிதியானமாகாண ஆளுனரின் அனுமதியெழுத்திடப்பட்டு இன்று முதல் உத்தியோகபூர்வமாக முழுமையான சட்டமாகியுள்ளது.



## மே 18, தமிழீழம் 2021









# உலக செய்திகள்

## பற்றி எரியும் காஸா...
## "இது முடிவல்ல ஆரம்பம்...தாக்குதல் தொடரும்"
## இஸ்ரேல் பிரதமர் எச்சரிக்கை!



மே 16

காஸா மீதான தாக்குதல் தொடரும். இது இன்னும் முடியவில்லை என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

பொதுமக்களுக்கு பெரிய பாதிப்பு ஏற்படாத வகையில் பயங்கரவாதிகளை நேரடியாக தாக்குகிறோம் என்றும் பெஞ்சமின் நெதன்யாகு கூறினார்.

### கடும் சண்டை

இஸ்ரெலுக்கும், பாலஸ்தீனத்திற்கும் இடையே பல ஆண்டுகளாக மோதல் நிலவி வரு கிறது. அண்மையில் இஸ்லாமியர்கள் மற்றும் யூதர்கள் தங்களது புனித இடமாகக் கருதும் கிழக்கு ஜெருசேலம் பகுதியில் நடந்த மோதல்கள் தற்போது நடந்து வரும் பெரும் மோதல்களுக்கு அச்சாரமாக அமைந்து. இதனை தொடர்ந்து காசா முனையில் இருந்து ஹமாஸ் அமைப்பு இஸ்ரேல் மீது ராக்கெட் தாக்குதல் நடத்தியது.

### பற்றி எரியும் காஸா

காஸா நகரம் எரிந்து கொண்டிருக்கிறது என்று கூறும் அளவுக்கு நிலைமை மோசமாக உள்ளது. காஸாவில் இருந்த பிரபல ஜசிரா, மற்றும் அசோசியேட் பிரஸ் ஆகிய நிறுவ னங்களின் அலுவலங்கள் அடித்து நொறுக்கப்பட்டன. இந்த நிலையில் காஸா மீதான தாக்குதல் தொடரும் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளர்.

## ஜஸ்மின் சூக்கா அவர்களின் மே 18 பற்றிய உரை

**சர்வதேச உண்மை மற்றும் நிதிக்கான செயற்திட்டம்**

மே 18.2021

12 ஆம் ஆண்டு முள்ளிவாயக்கால் நினைவு தினத்திற்காக இந்தசெய்தியை அனுப்புமாறு கேட்டுக்கொண்ட அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது உண்மையிலே எனது மனதைத் தொட்டுள்ளது. எனது சர்பாகவும், பிரான்சிஸ் ஹரிசன் மற்றும் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்திட்டத்திலுள்ள எனது அனைத்து சக பணியாளர்கள் சார்பாகவும் நான் இந்த செய்தியை அனுப்புகின்றேன்.

12 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் நினைவு நிகழ்வில் உலகம் முழுவதிலுள்ள தமிழ் சமூகத்துடன் நாம் இணைந்து கொள்கின்றோம். இலங்கையின் கொலைக் களங் களில்இறந்த பல் ஆயிரக்கணக் கானவர்களை நாம் நினைவு கூருகின்றோம். அத்துடன் குறிப்பாக தமது அன்புக்குரியவர்களை இழந்து உயிர்தப்பியவர்கள். மெனிக் பாமிலும் புனர்வாழ்வு முகாம் களிலும், சிறை வைக்கப்பட்டிருந்தவர்கள் ஆகியோரின் வேதனையையும் துன்பத்தினையும் நாங்கள் ஆழமாக உணர்ந்து கொள்கின்றோம். சித்திரவதை மற்றும் பாலியல் வன்முறை ஆகியன இந்த முகாம்களில் பொதுவாகவே இடம்பெற்றது என்பதும், அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்தவர்களால் இது தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது என்பது எமக்கு இப்போது தெரியும்.

நாம் துக்கம் கடைப்பிடிக்கும் அதேவேளையில் தமது அன்புக்குரியவர்களை தொடர்ந்தும் தேடிவரும். அத்துடன் இலங்கைப் பாதுகாப்பு படைகளால் அவர்களுக்கு சித்திரவதைகளும் மற்றும் அடக்குமுறைகளும் இலங்கையில் தொடர்கின்றன என்பது தொடர்ந்தும் மறுப்பவர்களை அவர்களது இந்த மறுப்பானது எங்களை அனைவரையும் அவமானப்படுத்துவதாய் உள்ளது



என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும் என நாம் அவர்களுக்கு அழைப்புவிடுகின்றோம்.

இந்த வாரம், பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள் முள்ளிவாய்க்கால் நினைவிடத்தில் ஒரு நினைவுச் சின்னத்தை நிறுவுவதற்கு தயாராகிக்கொண்டிருந்தார்கள். இந்தக் கருங்கல்லில் செய்யப்பட்ட நினைவுக்கல் இரவோடு இரவாக காணாமற்போயுள்ளதுடன் 10 வருட கால பழைய நினைவுத்தூபியும் அழிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த நினைவுத்துாபியானது வடக்கு மற்றும் கிழக்கில் 20,000 இற்கும் மேலான கல்லறைகளைக் கொண்ட 25 பாரிய மயானங்கள் வேண்டுமென்று மிருகத்தனமாக அழிக்கப்பட்டதன் விளைவாக இந்த நினைவுத்தூபி கட்டப்பட்ட நிலையில் இந்த அழிப்பானது குறிப்பாக பாதிப்பு மிக்கதாக உள்ளது.

பாதிக்கப்பட்டவர்களை தமது அன்புக்குரியவர்களுக்காக துக்கம் கடப்பிடிக்கவும், நினைவு கூருவதற்கும் மறுத்தல் ஒரு குற்றமாகும், அத்துடன் இது இலங்கையிலுள்ள சிறுபான்மைச் சமூகங்கள் எதிர்நோக்கியுள்ள அடக்குமுறை நிலைமையைக்காட்டுகின்றது. போர் முடிவடைந்து 12 வருடங்கள் கடந்துவிட்டன.

அத்துடன் இலங்கையில் இடம்பெற்ற பாரிய சர்வதேசக்குற்றங்களுக்கு நீதி மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்த வேண்டும் என அழைப்பு விடுக்கப்பட்டது. இந்த வருடம் மார்ச்சில் 46 ஆவது அமர்வில் மனித உரிமைகள் சபை ஒரு முன்னேற் றகரமான நடவடிக்கையை மேற்கொண்டது. உள்நாட்டுப் பொறுப்புக்கூறல் நடவடிக்கைகளைத்தொடர்வதற்கு தாம் அனுமதிக்கப்பட்ட வேண்டும் என மனித உரிமைகள் சபையினை திருப்பதிப்படுத்துவதற்கு அவர்கள் மேற்கொண்ட முயற்சி மறுக்கப்பட்ட போது சர்வதேச சமூகமானது இலங்கை அரசாங்கத்திற்கு ஒரு பாரிய அடியைக் கொடுத்தது.

இலங்கை அரசாங்கம் மீதான ஆழமான அவநம்பிக்கை, கொலைகள், வலிந்து காணாமற்போதல்கள், கூட்டான கொலைகள்,சித்திரவதைகள், மற்றும் மனிதாபிமானமற்ற முறையில் நடத்துதல் பற்றிய அவர்களது பொய்களை நிராகரித்து சர்வதேச சமூகமானது இலங்கையின் இறுதிப் போரில் இடம்பெற்ற குற்றங்கள் உட்பட இலங்கையில் இடம்பெற்ற குற்றங்கள் பற்றிய ஆதாரங்களைச் சேகரித்துப் பாதுகாக்குமாறு மனித உரிமைகள் உயர் அணையாளரின் அலுவலகத்திற்கு ஆணையிட்டது. இடைவெளிகளை அடையாளங்காணப்பதற்கு 18 மாதங்களைக் கொண்ட ஆணையைத் கொண்டுள்ளது.

தமது தகவல்களிலுள்ள இடைவெளிகளை நிரப்புவதற்கு அவர்கள் பின்னர் ஆதாரங்களைச்சேகரிப்பார்கள். வேறு சட்ட ஆட்சி எல்லைகளில் பொறுப்புக்கூறல் நடவடிக்கைகளுக்கு ஆதரவாக அவர்கள் சேகரிக்கின்ற ஆதாரங்கள் மற்றும் தகவல்களை பயன்படுத்த வேண்டும். சர்வதேச சட்ட எல்லையின் கீழ் உங்களுடைய நாட்டில் வழக்குகளைக் கொண்டுவருவதற்கு நீங்கள் அனைவரும் உங்களது அரசாங்கங்கள் மற்றும் போர்க்குற்ற வழக்கறிஞர்களிடம் ஆதரவு தேடுவது அவசியம் என்பதையே இது கருதுகிறது.

.

உங்கள் அனைவரும் இது எதனைக் கருதுகிறது? இதற்கு நடவடிக்கை அவசியம் - சர்வதேச சட்ட எல்லையின் கீழ் உங்களுடைய நாட்டில் வழக்குகளைக் கொண்டுவருவதற்கு நீங்கள் அனைவரும் உங்களது அரசாங்கங்கள் மற்றும் போர்க்குற்ற வழக்கறிஞர்களிடம் ஆதரவு தேடுவது அவசியமாகும். உறுப்பு நாடுகள் தாம் போரின் போதும் அதன் பின்னரும் தாம் சேகரித்த ஆதாரங்களை மனித உரிமைகள் உயர் ஆணையாளரின் அலுவலகத்தினை அணுகி அவற்றை வழங்க முடியும்.அத்துடன் அவ்வாறான ஆதரங்களை அந்த அலுவலகத்திற்கு கிடைக்ககூடியதாக செய்ய முடியும்.

அவர்களது போர்க்குற்ற வழக்கறிஞர்கள் தமது சொந்த நாடுகளில் வழக்குகள் மற்றும் எனைய பொறுப்புக்கூறல் பொறிமுறைகளுக்கு ஆதரவாக ஆதாரங்களை கேட்டுப் பெற்றக்கொள்ளவும் முடியும். நாங்கள் செய்யக்கூடிய இன்னுமொரு பயனுள்ள வேலையாக தடைகள் உள்ளன. உங்களில்லர் அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், கனடா மற்றும் அவுஸரேலியா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்திலுள்ள மக்னிட்ஸ்கி தடையை பற்றிக் கேள்விப்பட்டிருப்பீரர்கள். வெவ்வேறான அளவு கோலினைக் கொண்ட தடைகள் பல்வேறு நாடுகளி லுள்ளன அத்துடன் குற்றஞ்செய்தவர்களுக்கு நீதி மன்றங்கள் ஊடாக எம்மால் தண்டனை வழங்கமுடியாது இருந்தல் அதன்பின்னர் பாறுப்புக் கூறலுக்கான ஏனையவழிகளாக விசாக்களை வடிகட்டி ஆய்வு செய்தல் மற்றும் தடைகள் பற்றி நாம் சிந்திக்க வேண்டும். நீங்கள் அறிந்து கொண்டதைப் போல சவேந்திர சில்வா மற்றும் அவரது குடும்பத்தினர்அமெரிக்காவால் தடை செய்யப் பட்டிருக்கிறார்கள். அவர்கள் அங்கு பயணம்... 18ம் பக்கம்

# தமிழீழ மக்களே போதை பொருட்கள் ஒரு சமுதாய கொல்லி

உலக ரீதியில் இன்று உலக மக்களின் பயங்கர எதிரியாகவும் உயிர்க்கொல்லியாகவும் போதைபொருட்கள் விளங்குகிறது. சர்வதேசரீதியில் சில சமூக விரோத செயற்பாடுகளை அங்கீகரித்துச் செல்லும் முதலாளித்துவ போதைப்பொருட்களாக அபின், கஞ்சா, ஹெரோயின் மர்சுவானா L.S.D போன்றன வும், மருத்துவ சிகிச்சைக்கு பாவிக்கப்படும் சில மருந்துப் பொருட்களும் போதை பொருட் களாக தவராக பிரயோகம் செய்யப்படுகிறது. சிறுதொகையிலிருப்பினும் காலக்கிரமத்தில் அதுபல்கிப் பொருகி முழு நாட்டையும் குட்டிச் சுவராக்கும் ஆபத்தை உணர்ந்தே சர்வ தேசரீதியில் போதை பொருட்கள் விற்ப னைக்கு மிகக் கடுமையான தடை விதிக்கப் பட்டுள்ளது.

> **“போதை பொருள் பாவனையால் பாதிக்கப் பட்டோர் உடன் வைத்தியரை நாடி தகுந்த சிகிச்சை பெறாவிடின் மரணத்தை தவிர்க்க முடியாது.”**

நாடுகளில் கூட போதை பொருட் கள் விற்பனைக்கு மரணதண்டனை விதிக் கப்படுகிறது.

நெருக்கடிமிக்க இன்றைய சிங்கள ஆக்கிர மிப்பு சூழ்நிலையில் ஓர் கொடிய எதிரியிட மிருந்து எம் மக்களைகாகக் அரும்பாடுபட்டு வரும் இவ்வேளையில் எம்மை நாமே அழிக்கும் விதமாக போதை பொருட்கள் பாவனை தமிழீழமெங்கும் பெருகி வருகிறது.

எம் மக்களை ஆரோக்கிய மற்றவர்களாக்கி படிப்படியாக அழிக்கும் நோக்குடன் கூர்மை யடைந்து வரும் இப்போராட்டத்தை நசுக்கும் முகமாகவும் போதை பொருட்களை தமிழீழ பிராந்தியத்தில் சில ஏகாதிபத்திய சக்திகள் விநியோகித்து வருகிறார்கள்.

போதை பொருள் ஆரம்பத்தில் அதிக உணர்வுகளைத் தூண்டி பிற்பட்ட நிலையில் அதேயளவு சோர்வு, சமுதாயத்தில் விரக்தி, உடலில் நடுக்கம், ஈற்றில் தன்னைத்தானே அழிக்கும் மனோ நிலையைத் தோற்று விக்கும். போதை பொருள் பாவனையின் ஆரம்ப அறிகுறியாக மூச்சு விடுவதில் கடி னம், பலவீனம், அதிக வியர்வை வாந்தியெ டுத்தல், மலச்சிக்கல், ஆதிக நித்திரை, அவ்தான மின்மை போன்ற பக்கவிளைவுகள் ஏற்படுகின்றன.

போதை பொருள் பாவனையால் பாதிக்கப் பட்டோர் உடன் வைத்தியரை நாடி தகுந்த சிகிச்சை பெறாவிடின் மரணத்தை தவிர்க்க முடியாது.

போதை பொருள் பாவனையாளர் ஓர் மனிதத்துவத்தை முன்னிட்டு மரண தண்டனை தவிர்க்கப்பட்ட நாடுகளில் கூட போதை பொருள் விற்பனைக்கு மரண தண்டனை விதிக்கப் பட்டுள்ளது. எனவே தான் தமிழீழத்தில் போதை பொருள் பாவனை சிறியவையேனும் அநுமதிக்க முடியாது.

எனவே போதை பொருள் பாவனையை உடன் நிறுத்துமாறு போதை பொருள் பாவனையாளர் ஒவ்வொருவரையும் கேட்டுக்கொள்கிறோம்.

எமது சமுதாய ரீதியாக இடம் பெறும் சமூக விரோத செயற்பாடுகளின் தரகர்கள், உயிர் கொல்லியானதுமான கசிப்பு விற்பனையை யும் பாவனையையும் எம் இனத்தை பாதுகாப் பதற்காக கட்டப்படுத்துமாறு கேட்டுக்கொள் கிறோம். —நன்றி

# சுதந்திரமும் நாட்டுப்பற்றும்

சுதந்திரம் என்றால் என்ன? அது ஒரு மாபெரும் சக்தி. கண்ணுக்குத் தெரியாத ஆனால் அனுப விக்கக் கூடிய ஒன்று.

ஒரு மனிதன் ஒழுக்கமுடையவனாக, மனித நேயம் உடையவனாக இருக்க வேண்டுமானால் அவன் சுதந்திரமுள்ளவனாக இருக்க வேண்டும்.

எமிலி, சமுதாய ஒப்பந்தம் போன்ற நூல்களைப் படைத்து பிரான்சு நாட்டில் சுதந்திர உணர்ச்சியைக் கிளர்ந்தெழச் செய்த ரூசோ என்னும் அறிஞர் கூறுகின்றார்.

ஒரு மனிதன் தன்னுடைய சுதந்திரத்தைத் துறந்து விட்டானென்ற சொன்னால் அவன் தன்னுடைய மனிதத் தன்மையையும் துறந்து விட்டான் என்று அர்த்தம். அது மட்டுமல்ல மானிட இனத்தின் ஓர் அம்சத்தினன் என்ற முறையில் அவனுக:கு ஏற்பட்டிருக்கிற உரிமைகளையும் கடமை களையும் கூடத் துறந்துவிட்டான் என்றே கொள்ள வேண்டும். ஆவனிடத்தில் எந்தவிதமான நற்குணங்களையும் கொண்டு புகுத்தி அவனுடைய மனிதத் தன்மையை திருப்ப முடியாது. சுருக்கமாகச் சொன்னால் அவன் மனிதனே அல்ல.

அதனால் தான் “முழந்தாளிட்டுக் கொண்டு உயிரோடிருப்பதைக் காட்டிலும் நின்று கொண்டு இறப்பதே மேல்” என்ற உறுதிப்பாட்டினைக் கொண்டு இருந்தவர் மராட்டிய மன்னர் சிவாஜி.

உலகிலுள்ள எந்த மனிதனும் சுதந்திரமாகவே இருக்க விரும்புகிறான். ஆனால் இனமே அடிமைப்பட்டு இருக்கும் போது சுதந்திரத்திற்கு எங்கே போவது? எனவே முதலில் இனவிடுதலை வேண்டும். விடுதலை பெற்ற இனத்திற்கு சொந்த நாடும் வேண்டும்.

சொந்த நாடாக இருந்தாலும் அது அடிமை நாடாக இருந்தால் அதில் வசிப்பதை விட நரகத்தில் வாழ்வது மேலானது என்பது உண்மையே.

தாய் நாடு என்றுசொல்லும்போதே நம்மிடத்தில் வீர உணர்ச்சி பெருகுகின்றது. தாய் நாட்டை நேசிப்பது ஒவ்வொரு மனிதனதும் தலையாய கடமை.

தேசபத்தி என்பது யாரோ ஒரு மனிதனுக்கு மாத்திரம் மொத்தமாக அமைகின்ற பண்பு என்று யாரும் நினைத்தல் கூடாது. அது ஒவ்வொரு மனிதனிடத்தும் இயற்கையாக அமைந்துள்ள பிறவித்தன்மை.

அதனால் சொந்த நாட்டுக்கா துயரப்படுவது, துன்பத்தினை அனுபவிப்பது, மரணமடைவது எல்லாமே புனிதமான செயற்பாடுகள் எனப்படுகின்றன.

ஒரு இலட்சியத்தை நேசிக்கின்றேன் என்பதற்கு எது அடையாளம் என்றால் அதற்காக உயிரை விடக்கூட சித்தமாக இருக்கின்றேன் எனப்து தான். எனவே நாட்டு விடுதலைக்காக உயிரினை இழப்பது மிகப் பெரிய தியாகமாகும்.

குளிர்ந்த நிழலில் இருந்து கொண்டு எங்கே வெய்யில்? எங்கே வெய்யிலின் வெம்மை, என்று கேட்பது போல இன்னமும் சிலபேர் நம் மத்தியில் உள்ளனர்.

சந்தர்ப்ப வாதங்களினாலும், பொருளாதார நலன்கள் வசதியாக இருக்கின்ற படியாலும் இன்றைய எமது பொதுவான பிரச்சினைகளின் அடித்தளத்தை புரிந்து கொள்ள விரும்பாது இன உணர்வோ, மொழி உணர்வோ நாட்டுப் பற்றோ இன்றி போராட்டத்தில் எவ்வித அக்கறையுமின்றி மிகவும் சுயநலவாதிகளாக காணப்படுகின்றனர்.

உலக வரலாற்றிலேயே அத்தகையவர்கள் எப்போதும் தங்கள் வர்க்க நலன்களுக்கே முன்னுரிமை அளிப்பர்கள் என்பது உறுதிப்படுத்தப்பட்ட நிகழ்வுகளாகும்.

உயர்ந்த இலட்சியமில்லாத அந்த இலட்சியத்திற்கா உழைக்காத வாழ்க்கை, வாழ்கை அல்ல. எனவே எங்கள் இலட்சியத்தை உறுதிப் படுத்தவும், உழைக்கவும் முனைவோமாக. — நன்றி

# முள்ளிவாய்க்கால் நினைவு நாள்




## Mullivaikkal Remembrance Day

## May 18 2021

## ஈழத்தமிழின அழிப்பு நாள்


## தமிழ்த்தேசிய துக்க நாள்

## Eelam Tamil GENOCIDE DAY

## Tamil National MOURNING DAY

ஈழத்தீவில் தமிழர்களுக்கு எதிரான கட்டமைக்கப்பட்ட இன அழிப்பு தொடர்கிறது...

**Structural Genocide Against Eelam Tamils Continues in Eelam Island (Sri Lanka Island)...**




In 2009 Over 70,000 Eelam Tamils Murdered, 146,679 Tamils unaccounted, Over 95,000 Tamils Women Widowed by Sri Lanka's Government, Over 50,000 Tamils Children Orphaned.

United Nations & Government of Canada (Federal, Provincial & Regional Parties) Recognize Tamil Eelam Genocide and demand International Investigation on Genocide of Eelam Tamils

**தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்**

**The thirst of the Tamils is the Homeland of Tamileelam**

சங்கத்தமிழ்




# தமிழினவழிப்பின் நினைவாக மே 18 அன்று ‘முள்ளிவாய்க்கால் கஞ்சி’ உண்போம்!






நீண்ட இனவழிப்புப் போரின் இறுதி கட்டத்தில் எம் தமிழ்மக்கள் குறுகிய நிலப்பரப்பில் முடக்கப்பட்டார்கள். செல்மழையும், துப்பாக்கிச்சூடும், விமானக்குண்டுத் தாக்குதல்களும் கொத்துக்கொத்தாய் கொண்டிருக்க உணவும் மருந்தும் ஆயுதமாக்கப்பட்ட நிலையில் உண்பதற்கு எதுவுமின்றி நாட்கணக்காக பட்டினி கிடந்து பதுங்குகுழி மக்களாக அவலப்பட்டார்கள். இந்நிலையில் அவர்களின் உயிர்காத்தது போராளிகள் வழங்கிய கஞ்சிதான்.

மாத்தளன், வலைஞன் மடம், முள்ளிவாய்க்கால் என அவலப் பயணம் நகர்ந்த போது பணக்காரன் ஏழை, படித்தவன் படிக்காதவன் என்ற எந்த வேறுபாடுமின்றி அவர்களின் உயிர்காத்த இடங்கள் தான் கஞ்சிக் கொட்டில்கள். ஆரம்பத்தில் பச்சையரிசி, சிறதளவு பால், சீனி என்பன சேர்த்து தயாரிக்கப்பட்ட இக்கஞ்சி நாளடைவில் வெறும் அரிசியும் உப்பும் கலந்த உப்புக்கஞ்சியாயிற்று.

இவ்வாறு லட்சக்கணக்கான மக்களின் உயிர்காத்த இந்த கஞ்சியை “முள்ளிவாய்க்கால் கஞ்சி“ என்ற பெயருடன் அந்த மாபெரும் அவலத்தின் நினைவை வருடாந்தம் உயிர்ப்பிக்கும் உணவாக்கி எமது சந்ததிக்கு கடத்த உலகத்தமிழர் அனைவருக்கும் அழைப்பு விடுக்கிறோம்.

எவ்வாறு யூதர்கள் எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து புறப்பட்டபோது உண்ட பயண உணவை வருடாந்தம் உண்டு தம் நினைவுகளைத் தக்கவைத்து சீயோனுக்கு திரும்பினார்களோ அதுபோல் எம்மினத்தின் வீரமும் அவலமும் நிறைந்த ஒரு வரலாற்றுக்கட்டத்தை எம்மினத்தின் தேசிய இருப்பை தக்கவைக்கும் நினைவாக உயிர்ப்புடன் பேண வருடாந்தம் தமிழினவழிப்பு நினைவு நாளாகிய மே 18 இல் “முள்ளிவாய்க்கால் கஞ்சியை“ உணர்வுமிகு உணவாக்குவோம்.

ஆகவே உலகெங்கும் வாழ் தமிழ் உறவுகளே!

- அன்றைய நாளில் எமது வீடுகளில் “முள்ளிவாய்க்கால் கஞ்சியை“ ஒரு நேர உணவாக்குவோம். அதை உண்ணும் போது எமது தேசத்தின் வரலாற்றை எமது பிள்ளைகளுக்கு விளக்கி நினைவுகளை அடுத்த சந்ததிக்கு கடத்துவோம்!

- ஆலயங்களிலும் பொது இடங்களிலும் கஞ்சிக்கொட்டில் அமைத்து “முள்ளிவாய்க்கால் கஞ்சியை“ அனைவருக்கும் வழங்கி உணர்வுகளைப்பகிர்ந்து கொள்வோம்!

நினைவுகளின் நீட்சியே தமிழினவழிப்பின் சாட்சி, இச்சாட்சியே எம்மக்களுக்கான மீட்சியின் வழியென உணர்ந்து உணர்வுபூர்வமாக இந்த நினைவேந்தலை முன்னெடுப்போம்.

இனவழிப்பின் ஆயுதமாக பயன்படுத்தப்பட்ட உணவையே நினைவேந்தலின் வடிவமாக்குவோம் மே 18 இல் முள்ளிவாய்க்கால் கஞ்சி உண்போம்!

**தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்** சங்கத்தமிழ்



# 'மே 18' முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை உலகத் தமிழர் நினைவில் மாறாத சுவடு

– சிவாலெனின்

தனக்குச் சொந்தமான நாட்டை அந்த இனத்திடமிருந்து பறித்து, அவர்களை உரிமைக்கு அந்நியமாக்கிதோடு மட்டுமின்றி, ஓர் இனத்தின் வரலாற்றையும் அவர்களின் வாழ்வியல் தொன்மையையும் அழிப்பது உலகின் உச்சக்கட்டமான இன அழிப்பாகும். தங்களின் உரிமைக்குப் போராடியத் தமிழினத்தை முற்றாக அழித்திட சிறீலங்கா சிங்கள அரசு தமிழினத்திற்கு எதிராக கட்டவிழ்த்த கொடுமைகளும் கொடூரங்களும் கொஞ்சம் நஞ்சமல்ல. அஃது வார்த்தையால் விவரிக்க முடியாது வலி நிறைந்தது.

இன அழிப்பு எனது மனிதக் குலத்திற்கு எதிராக மேற்கொள்ளப்படும் மிக மோசமான அல்லது கொடூரமான குற்றச் செயலாகும். அரசியல், அரசாட்சி உட்பட ஓர் இனத்தின் ஆளுமையும் அதிகாரமும் மேலோங்கும் நிலையில், அங்கு வாழும் சிறுபான்மை இனத்திற்கு எதிரான கொடூரங்களும் கொடுமைகளும் அரங்கேறுவது இயல்பாகி விட்டது என்றுதான் கூற வேண்டும்.

அவ்வாறு தன் இனத்தைக் கொடூரமாக அழிக்கும் இனத்திற்கு எதிராக கிளர்ந்து எழும் போது, அஃது உள்நாட்டுப் போராகவோ அல்லது உள்நாட்டு பிரச்சனையாகவே உருவெடுக்கிறது. இம்மாதிரியான சூழலில் சிறுபான்மை மற்றும் அதிகாரமற்ற நிலையில் இருக்கும் இனத்திற்கு எதிராக அதிகாரமும் அளுமையும் கொண்டிருக்கும் இனம் புரியும் அட்டூழியங்கள் எழுத்துகளில் விவரிக்க முடியாத ஒன்றாக விளங்குகிறது.

யூதர்களுக்கு எதிராக கிட்லர் புரிந்த இன அழிப்பு பெரும் அச்சத்தையும் நினைத்துக்கூட பார்க்க முடியாத சம்பவங்களாகவும் இன்றைக்கும் நினைவுக் கூறுகிறோம். நாஜிக்களால் யூதர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இன அழிப்புத்தான் கடந்த நூற்றாண்டில் நிகழ்ந்த இன அழிப்பு என நம்மில் பலர் கருதிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், உண்மையில் அதற்கு முன்னதாகவே, அதாவது 1915க்கும் 1920க்கும் இடையில், சத்தமே இல்லாமல் துருக்கியில் ஒட்டோமான் இனத்தால் ஆர்மீனியர்கள் பெரும் எண்ணிக்கையில் கொல்லப்பட்டுள்ளனர். அதனைத் தொடர்ந்து ருவாண்டாவில் இலட்ச ஹுடு இனத்தவர்கள் கொல்லப்பட்டதும் கூட இன அழிப்புத்தான்.

அதுமட்டுமின்றி, 1932 தொடங்கி 1933 வரையில் உக்ரையினில் சோவியத் ஒன்றியம் ஏற்படுத்திய செயற்கை பஞ்சம் கூட இன அழிப்புத்தான் என வகை செய்யப்பட்டிருக்கும் நிலையில், 1975ல் கிழக்குத் தீமோர் மீது இந்தோனசியப் படையெடுப்பும் இன அழிப்புத்தான் என்று வகை செய்யப் பட்டுள்ளது. மியன்மாரில், ரோஹிங்கியா இனத்திற்கு எதிராக அந்நாட்டு அரசாங்கமும் அந்நாட்டின் தேசிய இனமும் புரியும் கொடூரங்களையும் கொடுமைகளையும் இன அழிப்புத்தான் என்று வகை செய்யப்பட்டுள்ளது.

இன அழிப்பு என்பது ஓர் இனத்தைப் போரில் கொல்வதிலும் அவர்களை அடித்து துரத்துவதிலும் சித்திரவதை செய்வதிலும் அடங்கி விடவில்லை. மாறாக, அவ்வினத்திற்கு எதிராக உடல் மற்றும் உள ரீதியாக புரியப்படும் கொடூரமான அல்லது கொடுமையான செயல்களும், இனப் படுகொலைதான்.

மேலும், ஓர் இனத்தின் பிறப்பைத் தடுப்பது, வழுக்கட்டாயமாக வேறு இனக் குழுவோடு சேர்ப்பது ஆகியவையும் இன அழிப்புத்தான் என, 1948ல் இனப் படுகொலை குறித்த ஐநாவின் தீர்மானத்தில் உள்ளடங்கியுள்ளது. இது 1951 ஜனவரியில் நடைமுறைக்கு வந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்படி இன அழிப்பு என்பது, ஒவ்வொரு காலக்கட்டத்திலும் சத்தமின்றி அரங்கேறிக் கொண்டு தான் இருக்கிறது. அந்த வகையில், உலகத் தமிழர்கள் மத்தியில் தமிழீழம் மலரும் எனும் பெரும் நம்பிக்கை தொடர்ந்துக் கொண்டிருந்தபோதுதான், அந்தக் கொடூரம் நடந்தேறியது. ஆம் சுமார் 12 ஆண்டுகளை எட்டிவிட்ட நிலையிலும், உலகத் தமிழர்களின் இதயங்களில் இன்னமும் குருதி வடிந்துக் கொண்டிருக்கும் மே 18 இன அழிப்புத்தான் அது.

சிறீலங்கா அரசு அந்நாட்டில் தமிழர்களுக்கு எதிராக மேற்கொண்ட இன அழிப்பின் உச்சம் நடந்தேறிய நாள் தான் இந்த மே 18. 12 ஆண்டுகளுக்கு முன்னர் முள்ளிவாய்க்கா லில், 2009-ம் ஆண்டில், இனவாத சிறீலங்கா அரசால் இக்கொடூரம் நடத்தப்பட்டது. சுமார் 70,000 பேர் அன்றைய நாளில் முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட் டதாக கூறப்படுகிறது. இவர்களில் விடுதலைப் போராளிகள் உட்பட பெரும்பான்மையோர் அப்பாவி தமிழ் மக்கள் என்பது குறிப்பிடத்தக் கது.

மக்களைக் கேடயமாக வைத்து, முன் நகர்வினை மேற்கொண்டு புலிகளைச் சூழ்ச்சியால் வீழ்த்திய சிறீலங்கா சிங்கள இராணுவம் அப்பாவி மக்களையும் கொன்று குவித்து மாபெரும் இன அழிப்பிற்கு வித்திட்டது. காலம் காலமாக தமிழ் மக்கள் ஆடிப்பாடி வாழ்ந்த ஊர் எங்கும், அன்றைய தினத்தில் சாவு ஓலங்கள் ஒலித்தது. நிற்காமல் தொடர்ந்து அங்காங்கே அழும் குரல்கள். துப்பாக்கி தோட்டாக்களுக்கும் எறிகுண்டுகளுக்கும் பலியானவர்கள் போக, எஞ்சியவர்கள் சித்தம் இழந்து முள்ளிவாய்க்கால் சூன்யமாகிப் போனது.

போர் நடக்கும் போது பள்ளிக்கூடங்கள், மருத்துவமனை, வழிபாட்டுத் தலங்கள் உட்பட பொது மக்கள் தஞ்சம் புகும் எவ்விடத்திலும் தாக்குதல் நடத்தக்கூடாது என்பது போர் மரபு. ஆனால், சிறீலங்காவில், உச்சக்கட்ட போரின் போது சிங்கள இராணுவம் உயிரைக் காத்துக்கொள்ள மருத்துவமனையில் தஞ்சம் புகுந்தவர்களையும் விட்டு வைக்கமால் குண்டு மழை பொழிந்து கொன்றது. அவர்களின் நோக்கம், விடுதலை புலிகளை வீழ்த்துவதல்ல மாறாய், தமிழினம் இருக்கவே கூடாது என்பதற்கு இதுவே தக்க சான்று.



மே 18-ல், முள்ளிவாய்க்காலில் தமிழீழ விடுதலை போர் முடிவுக்கு வந்ததாக கூறப்படும் நிலையில் சிங்களப் பௌத்த பேரினவாத அரசாங்கம் சுமார் 15-க்கும் மேற்பட்ட நாடுகளின் உதவியோடு இந்த விடுதலை போரா முடிவுக்கு கொண்டு வந்தது.

போருக்கு ஒரு நியாயமும் மரபும் உள்ளது. வெள்ளைக் கொடியோடு வந்தவர்களைக் கூட கொன்று குவித்து மகிழ்ந்தது சிங்கள இராணுவம் போரில் எந்நிலையிலும் அப்பாவி மக்களைக் கொல்லக்கூடாது என்பது மனித உரிமைச் சட்டமாகும். இந்த

மரபையும் மீறி 70,000-க்கும் மேற்பட்ட தமிழர்களைக் கொன்று குவித்த சிங்கள அரசிற்கு எதிராக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படாமல் வல்லரசுகளும் ஐநாவும் இத்தனை ஆண்டகள் கடந்தும் மௌனம் காப்பதுகூட தமிழினத்திற்கு எதிரான ஒன்றானதாகவே சிந்திக்க வேண்டியுள்ளது.

சிறீலங்கா அரசியலில் 1950-களில் ஏற்பட்ட அரசியல் மாற்றம் அரசியல், பொருளாதாரம், மொழி, மதம் சார்ந்ததாக அமைந்திருந்த வேளையில், சிங்கள அரசு தனது ஆளுமை மற்றும் அதிகாரத்தைப் பிற இனங்களின் மீது திணிக்கத் தொடங்கியது. இலங்கையின் பெரும்பான்மை இனம், பிற சிறுபான்மையினரை எதிரியாகப் பார்த்தது. அந்நிலையில் தமிழர்கள் பல கட்டங்களில் ஏமாற்றப்பட்டதோடு, தொடர்ந்து உரிமைகள் மறுக்கப்பட்டு ஒடுக்கவும் பட்டனர். தமிழீழ விடுதலை போராட்டத்திற்கு இதுவே முதன்மை காரணியுமாக அமைந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழீழ விடுதலைக்காக, புலிகளின் போராட்டங்கள் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் தனித்துவமாகவே இருந்து வந்தது. பலவேளைகளின் புலிகளின் கைகள் ஓங்கியிருந்தது. புலிகளை வீழ்த்தவது அவ்வளவு எளிய காரியமல்ல என உணர்ந்த சிங்கள இனவாத அரசு, அப்பாவி தமிழ் மக்களைப் பிணை வைத்து பல்வேறு நாடுகளின் உதவியோடு, சூத்திரமாக வீழ்த்தியது. அதர்மமும் அநியாயமும் கொல்லப்பட்டதாக கொக்கரித்தது.

ஆனால், இது நிரந்தரமல்ல. மீண்டும் உயிர்தெழுவார்கள், தமிழீழம் உதயமாகும் என உலகத் தமிழர்கள் இன்னமும் நம்பிக்கையோடுதான் இருக்கிறார்கள்.

முள்ளிவாய்க்காலில் நிகழ்ந்த உச்சக்கட்ட போரின் போது, படுகொலைகளும் பாலியல் வன்கொடுமைகளும் நிகழ்ந்தது உறுதி செய்யப்பட்டது. அதனை சேனல் 04 எடுத்த வீடியோக்களும் புகைப்படங்களும் உறுதி செய்தன. ஐநாவும் இறுதிக்கட்ட போரின் போது, போர் மரபு மீறப்பட்டிருப்பதாகக் கூறி, அதற்கான நம்பகமான மற்றும் உறுதியான ஆதாரங்கள் கிடைத்துள்ளதாகவும் கூறியது.

மேலும், அனைத்துலகப் போர் குற்ற விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என கூறியது. ஆனால், இன்று வரை இலங்கை இனவாத அரசுக்கு எதிராக எவ்வித விசாரணையும் மேற்கொள்ளப்படவில்லை. சிங்கள இராணுவம் கொடூரமான போர் குற்றங்களைப் புரிந்துள்ளது வெட்ட வெளிச்சமாகியும், 12 ஆண்டுகளை எட்டிவிட்ட நிலையிலும் எந்தவொரு விசாரணையுமின்றி, சிங்கள இனவாதம் உலா வருவது தமிழர்களுக்க எதிராக மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல் குழித்தோண்டி புதைக்கப்பட்டு விட்டது என்றுதான் கொதிக்க வேண்டியுள்ளது.

முள்ளிவாய்க்காலில் நிகழ்ந்த கொடூரங்களை உலகம் அறிந்திருந்தும், தட்டிக்கேட்கவும் தமிழர்களுக்கு ஆதரவாக குரல் கொடுக்கவும் யாரும் முன் வரவில்லை. ஓர் இனத்திற்கு எதிராக புரியப்பட்ட இன அழிப்பிற்கு உலகமே வாய்மூடி கிடப்பது என்னவொரு அவமானம். சிறீலங்காவில் நிகழ்ந்த இன அழிப்பு அராஜகம், கொடுமைக்கு எப்போது நீதி கிடைக்கும் எனும் கேள்வி இன்னமும் உலகத் தமிழர்கள் மத்தியில் எழுந்துகொண்டுதான் இருக்கிறது.
கடந்த 2006-ம் ஆண்டு ஜூலை மாதம் தொடங்கி மே 2009 வரை சுமார் 1 இலட்சத்துக்கும் மேல் சிங்கள இனவாதம் படுகொலை செய்து, இன அழிப்பினை செய்துள்ளது. இது எவ்வளவு மோசமான வலி மிகுந்ததாக இருக்கும் என்பதை எண்ணிக்கூட பார்க்க முடியவில்லை.

உறவுகளை இழந்து, உடமைகளை இழந்து, உடல் பாகங்களையும் இழந்து நடைபிணம் போல் உயிரை மட்டும் பிடித்துக் கொண்டு பிற நாடுகளில் நாடோடிகளாகவும் சொந்த நாட்டில் அகதிகளாகவும் வாழும் தமிழர்களுக்கு இந்த உலகத்தின் மனிதாபிமானம் தான் என்ன? பாதிக்கப்பட்டவன் தமிழன் தானே என அலட்சியம் தொடர்ந்தால் மீண்டுமொரு விடுதலை போர் கிளர்ந்தெழுந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை எனலாம்.

மே 18 துயரத்தை நினைவுக்கூறுவதன் மூலம், தமிழர்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட அந்தப் பேரவலத்தை மக்களிடமும் உலக அரங்கிலும் இன்னமும் ஒலிக்க செய்வதோடு, போர் குற்றம், மனிதகுலத்திற்கு எதிரன குற்றம் புரிந்த சிங்கள இனவாதத்தின் மீது அனைத்துலகப் போர் குற்ற நீதிமன்றத்தின்



நடவடிக்கைக்கும் உட்படுத்த முடியும் என நம்பப்படுகிறது.

மே 18 நினைவுநாள் உலகின் தமிழர்கள் வாழும் பல நாடுகளில் ஒவ்வொரு ஆண்டும் நினைவுக்கூறப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு ஆண்டும் இந்த மே 18ஐ நினைவுக்கூறி வருகிறார்கள் என்பது கிறப்பிடத்தக்கது. அவை:-

1. இலங்கை அரசு மீது சர்வதேசப் போர் குற்றம், மனித குலத்திற்கு எதிரான குற்ற விசாரணை வேண்டும்.
2. வடக்கி-கிழக்கு பகுதிகளில் இருக்கும் படையினரை மீட்டுக்கொள்ள வேண்டும்.
3. தமிழர்களின் நிலங்களைத் திரும்ப ஒப்படைக்க வேண்டும்.
4. தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும்.
5. காணமால் போனோரின் தகவல்கள் வழங்கப்பட வேண்டும்.
6. தமிழர் பகுதியில் சிங்கள குடியேற்றத்தை நிறுத்த வேண்டும்.


உச்சக் கட்டப் போருக்குப் பின்னரும் சிறீலங்காவில் இன்னமும் தமிழர்களுக்கு எதிரான கொடுமைகளும் அநீதிகளும் தொடர்ந்துக் கொண்டுதான் இருக்கின்றன. தமிழர்கள் பகுதிகளில் சிங்களர்களைக் குடியேற்றம் செய்வதன் மூலம், தமிழினத்தின் வாழ்வாதார உரிமையைக் கூட சிங்கள அரசு மறுத்து வருகிறது. தமிழர்களுக்கான மறுவாழ்வு மலர்ச்சியினை அது மறுக்கிறது. அவர்களுக்கான வசதிகளும் தேவைகளும் நெரிக்கப்படுகின்றன.

ஈழத் தமிழர்களுக்கு எதிராக தொடுக்கப்பட்டு வரும் அநீதிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும். ஐநாவின் தொடரும் மௌனத்தினாலும் உலக நாடுகளின் அலட்சியங்களினாலும், ஈழத்தமிழினத்தின் மீதிலான சிங்களப் பேரினவாதத்தின் அட்டூழியங்கள் தொடர்கதையாக இருந்து வருகிறது. இக்கொடுமைகளைப் பார்த்தக் கொண்டிருக்கும் சர்வதேச நாடுகள், ஓர் இனத்தின் அழிவு என்பது உலகின் அழிவிற்கு முதல் புள்ளி என்பதை மறந்த விட வேண்டாம்.
ஈழத் தமிழர்களுக்கு அதரவாக அணி திரளுங்கள், சர்வதேசப் போர் குற்றம், மனித குலத்திற்கு எதிரான குற்றத்தின் கீழ் சிறீலங்கா விசாரிக்கப்படுவதை உறுதி செய்யுங்கள் உலக தமிழர்களே ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக கரம்கோர்ப்போம் - மே 18, சர்வதேச நாளாக நினைவுக்கூர்ந்து உலக நாடுகளுக்கு அழுத்தம் கொடுப்போம் வாரீர். ஈழத் தமிழர்களுக்கு எதிரான மனித உரிமை மீறலை தடுத்து நிறுத்துவோம். அதகற்கு நமது ஒவ்வொருவரின் குரலும் உலகெங்கும் ஒலிக்க வேண்டும்.

- நன்றி மலேசியத்தமிழன் சிவாலெனின் அவர்களுக்கு -

# தியாக வேள்வி

(உண்மைச்சம்பவம்)



அவசர அவசரமாக கதவைத்தட்டும் ஓசை.

வீட்டின் உள்ளே தன்மையில் இரந்த அவள் திகிலுடன் யாரது எனக் கேட்டாள்.

"நான் ஒரு வழிப்போக்கன் தயவு செய்து இரவு தங்குவதற்கு உதவி செய்யுங்கள்."

"என்ன இது இந்த இரண்டும் கெட்டான் வேளையில்" என்று முணு முணுத்தவாறே அவள் லேசாகக் கதவைத்திறந்து பார்த் தாள்.

"யார் நீங்கள்? என்ன வேண்டும் உங்க ளுக்கு? அவள் கேட்டாள்.

பக்கத்து கிராமத்தில் இருந்து வருகிறேன் அம்மா இன்று இரவு மட்டும் எனக்கு இடம் அளியுங்கள்" வெளியே நின்ற அந்தப் பெரியவர் கேட்டுக் கொண்டார்.

ஒருமுறை அவரையே ஏற இறங்கப் பார்த்தாள் நரைத்த முடி, பஞ்சடைந்த கண்கள், ஆனால் அவரின் கண்களில் ஓர் ஒளி.

வந்தவரின் கேள்விக்குப் பதில் சொல்லா மலே உள்ளே வாருங்கள் ஐயா என்று அன்பாக அழைத்தாள் அந்தத் தாய்.

வெளியே சென்ற கணவர் வந்தால் என்ன சொல்லுவாரோ என்ற கேள்வி அவள் உள்ளத்தில் எழுந்தது. எதற்கும் முதிய வரான இந்த வழிப்போக்கருக்கு இடமளிப் பதில் தவறில்லையென அவள் மனம் எண்ணி இடம் கொடுத்தது.

ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டு அவரை அமரச்சொல்லி விட்டு அவள் அடுக்களைக்கு சென்றாள்.

சற்று நேரத்திற்கெல்லாம் அவள் மீண்டும் கையில் ஒரு தட்டுடன் தோன்றினாள். அதில் சில சப்பாத்திகளும் குடிநீரும் பாலும் இருந்தன. சாப்பிடுங்கள் ஐயா இப்போதை க்கு இவை மட்டும் தான் இருக்கின்றன என்றாள்.

அவர் நன்றியுடன் அவளை ஒருமுறை பார்த்துவிட்டு உண்ணத் தொடங்கினார். பல நாட்கள் பட்டினியாக இருந்து களைத் துப் போன அவரால் அதிகமாக உண்ண முடியவில்லை.

இது அந்த இல்லத்தரசியை ஆச்சரி யத்தில் ஆழ்த்தியது " உங்களைப் பார்தால் கடுமை யான பசியால் பாதிக்கப்பட்டவரைப் போலத் தெரி கின்றது. ஆனால் நீங்கள் நன்றாகச் சாப்பிடவில்லையே" என்று ஆதர வுடன் கோட்டாள்.

பெரியவர் அவளை நிமிர்ந்து பார்தவாறோ " மகளே இதற்குப் பதிலளிப்பதானால் ஓர் அதிர்சிதரும் பயங்கரமான கதையைத் தான் கேட்க நேரிடும்" என்றார்.

அவளோ சொல்லுங்கள் என்று ஆவலோடு அவரை உற்று நோக்கினாள்.

"இந்தப் பாரததேசத்தை அதாவது எமது தாய்நாட்டை ஆண்டு கொண்டிருக்கும் வெள்ளையரின் அரசு என்னைத் தேசத்துரோகி என கூறுகின்றது. ஆனால் என் நாட்டு மக்களோ என்னை தேச பக்தனா கவும் விடுதலை வீரனாகவும் மதிக்கின்றார்கள்.

வெள்ளையன் அரசு எனது தலைக்கு விலைபேசி சன்மானமும் அளிக்கத் தயாராய் இருக்கின்றது. ஆனால் நான் செய்த குற்றம் எனது நாட்டு மக்களுக்கும் எனது நாட்டிற்கும் சுதந்திரம் வேண்டும் என்று கிளர்ச்சி செய்வதும் விடுதலைப் போரை முன்னெடுத்துச் செல்வதும் தான். என்னுடைய உண்மை நிலையை எடுத்துச் சொன்னால் யாரும் எனக்கு உதவப் பயப்படுவார்கள். காரணம் அவர் களுக்கும் ஆபத்து வந்துவிடும் என்று. இலைகளையும் காய்களை யும் உண்டு பசியை அடக்குகிறேன். நான் அனுப விக்கும் கஷ்டங்கள் பெரிதல்ல. அம்மா எங்கள் அன்னை பூமி விடுதலை பெற வேண்டும். அதுவரை என்ன கஷ்டங்கள் என்றாலும் அனுபவிக்கத் தயாராக உள்ளேன். எனது மகளைப்போல் நீ இருந்தாலும் ஓர் தாயின் பரிவுகாட்டி என்னை உபசரித்திருக்கிறாய். உன் பரிவை என்னால் மறக்கமுடியாது என்று நன்றிப் பெருக்குடன் கூறினார் முதியவர்.

சிறிது ஆகாரம் உள்ளே போன தாலோ என்னவோ அவர் சிறிது தெம்பானார், தூக்கம் லேசாக அவ ரது கண்களை தழுவிக்கொள்ள ஆரம்பித்தது.

"ஐயா எல்லாம் சொன்னீர்கள் உங் கள் பெயரை மட்டும் எனக்கு சொல்ல வில்லையே" என்று அவள் ஆவலோடு கேட்டாள்.

" நான் தானம்மா தலைக்கு விலை பேசப்படும் "நானாசாகிப்" என்றார் பெரிய வர். அவள் அதிர்ச்சி அடைந்தாள். தன்னையே நம்பமுடியாத நிலை தெய்வமே தனக்கு முன்னால் வந்து காட்சி தருவது போன்ற ஒரு பிரமை. தாய்நாட்டின் விடுதலைக்காகத் தன்னையே அர்ப்பணித்த மாகனிற்கு ஒரு வேளை உணவாவது கொடுப்பதற்குத் தனக்கு சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு பேரானந்த மடைந்தாள்.

அவர் அன்று இரவு தங்குவதற்கு அடுத்த அறையில் அவருக்கு அவள் ஏற்பாடு செய்தாள், களைப்பு மிகுதியால் அவர் சற்று நேரத்திற்கெல்லாம் நித்திரையில் ஆழ்ந்தார் அவள் தூங்காமல் வழித்துக் கொண்டிருந்தாள்.

சுமார் ஒருமணிநேரமிருக்கும், தன்னை யாரோ உலுக்கி எழுப்புவதை உணர்ந்தார் நானாசாகிப் எழும்புங்கள் எழும்புங்கள் தயவுசெய்து இந்த இடத்தைவிட்டுப் போய்விடுங்கள் என அவசரப்பட்டாள் அந்தத் தாய். ஏதோ ஆபத்து வந்தது என உணர்ந்த பெரியவர் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுப்பினார். அவசரமாக வெளியே சென்றபோது கதவருகே தரையில் கத்திக்குத்துப்பட்ட நிலையில் ஒரு மனிதன் இரத்த வெள்ளத்தில் மரண வேதனையுடன் துடிதுடித்துக் கொண்டு இருப்பதைக் கண்டார். அவர் மனம் சஞ்சலத்தில் ஆழந்தது. அடுத்தகணம் அவருடைய வார்வை அந்தப் பெண்மீது சென்றது. அவளது கையில் இரத்தக் கறையுடன் ஒரு பெரிய கத்தி.

அவருக்குத் தன்னுடைய கண்களையே நம்பமுடியவில்லை "என்ன இது, நீதானா இந்தக் கொலையை...? அவர் கேள்வி யைப் பூர்த்தி செய்வதற்குள் அவள் முந்திக் கொண்டுடாள்.

"ஆம் நான் தான் ஐயா இந்தக் கொலையைச் செய்தேன்"

தலையை கப்பீரமாக உயர்த்தியபடி நிமிர்ந்து துயரமோ குற்ற உணர்வோ திகிலோ இல்லாமல் அவள் கூறினாள்.

"இந்த அற்பப்பிறவி எனது கணவன் தான். ஆனால் தங்களைக் காட்டிக் கொடுக்க முற்பட்ட துரோகி, கயவன். பணத்துக்காக தங்களையே காட்டிக் கொடுக்க முனைந்த நயவஞ்சகன்.

கல்லாக சமைந்துவிட்ட நிலையில் அந்த மாவீரன் இருக்க அவள் தொடர்ந்து சொன்னாள்.

பொலிஸ் நிலையம் சென்று தகவல் கொடுக்க முயன்றான். எவ்வளவோ நான் சொல்லிப் பார்த்தேன். எமது நாட்டின் சுதந்திரத்தின் தேவையை அன்னிய அரசின் கொடுமையை எல்லாமே சொல்லிப் பார்த்தேன் பயனில்லை. எங்கள் தலைக்கு நிர்ணயிக்கப்பட்ட விலையை சன்மானமாகப் பெறுவதே அவன் நோக்கமாக இருந்தது. என்சொந்த மண்ணையும் மக்களையும் அன்னி யரிடம் இருந்து மீட்கப் புறப்பட்ட ஒரு தியாகியைக் காட்டிக்கொடுத்த பழி என்மீது வரக் கூடாது என்பதற்காக எனது கணவனையே கொன்றுவிட்டேன். என் மாங்கல்யம் அழிந்தாலும் எம்மரபு அழியக்கூடாது ஐயா எனக் கூறி அழுதாள்.

வீரப்புரட்சியாளன் நானாசாகிப் அந்த வீராங்களையின் கால்களில் விழுந்தார். பெண்மைக்கு இவ்வளவு வல்லமையா? என்று வியந்த அவர் வீரமகளே எலக சரித்திரத்தில் உனது தியாகத்திற்கு ஈடேகிடையாது. இந்திய சுதந்திரப் போராட்ட வீரர்களின் தலைகள் எனக்கு முன்னால் கவிழ்கின்றன. உனது கால் தூசுக்கு முன்னால் நான் எம்மாத்திரம்.

அவரது தொண்டை கம்மியது, குரல் தழுதழுத்தது.

(குறிப்பு: - நானாசாகிப் 1858 இல் நடைபெற்ற முதல் இந்திய விடுதலைப் போரில் கலந்து கொண்டு புகழ்பெற்ற வீரப்புரட்சியாளர்)

**" என்சொந்த மண்ணையும் மக்களையும் அன்னியரிடம் இருந்து மீட்கப் புறப்பட்ட ஒரு தியாகியைக் காட்டிக்கொடுத்த பழி என்மீது வரக் கூடாது என்பதற்காக எனது கணவனையே கொன்றுவிட்டேன். என் மாங்கல்யம் அழிந்தாலும் எம்மரபு அழியக்கூடாது "**

# தமிழ் ஈழம்: நாட்டு எல்லைகள்







முதலாவது

**நிலம் என்னும் நல்லாள்**

உலகம் உருண்டையானது. உலகின் மொத்தப் பரப்பில் மூன்றில் ஒரு பங்கு நிலப்பரப்பு மூன்றில் இரண்டு பங்கும் நீர்ப்பரப்பே நிலப்பரப்பையும் நீர்ப்பரப்பையும் சுற்றி, வானம் வெளியாக உள்ளது.

வானவெளியிலோ, நீர்ப்பரப்பிலோ, நீருக்குள்ளோ மனிதன் வாழ்வதில்லை நிலப்பரப்பில் மட்டுமே மனிதன் வாழ்கிறான் நிலமே மனிதனின் வாழ்விடம். உலகின் மொத்தப் பரப்பளவில், மூன்றில் ஒரு பங்குப் பரப்பளவில் மட்டுமே மனிதன் வாழலாம்.

நிலப்பரப்பு எங்கும், எப்பொழுதும் ஒரே சீரானதாக அமைவதில்லை. மாற்றமுடையதாக அமைவதே இயற்கை, நிலமும் மாற்றமுடையதே, மேடாக மிதந்தும், பள்ளமாகப் பாய்ந்தும், மலையாக உயர்ந்தும், குன்றாக நிமிர்ந்தும், குகையாகக் குடைந்தும், காடாக அடர்ந்தும், களனியாகப் பரவியும், கடும் பாலையாக விரிந்தும், சமவெளியாகத் தெரிந்தும், மண்ணும் நீரும் மயங்கிய சகதியாகப் புதைந்தும் நிலம் அமைகின்றது.

இயற்கையோடு இயைந்த வாழ்வு வாழ்கின்ற மக்களுள் தமிழ் மக்கள் தலையானவர்கள். நிலத்தின் தன்மைகளையும், இயல்புகளையும் பிரித்தறியக் கூடியவர்கள். நிலத்தை ஐந்து வகையாகத் தமிழர்கள் வகைப்படுத்தினார்கள்.

மலையும் மலைசார்ந்த நிலமும் குறிஞ்சி காடும் காடு சார்ந்த நிலமும் முல்லை வயலும் வயல் சார்ந்த நிலமும் மருதம் கடற்கரையும் அதைச் சார்ந்த நிலமும் நெய்தல் இந்நால்வகை நிலமும் ஒன்றுடன் ஒன்று மயங்கிய போதும், கடும் வெய்யிற் கானமாய் அமைகின்ற போதும் உள்ள நிலம் பாலை.

அமைப்பில் மட்டுமல்ல தட்பவெப்பத்தாலும் நிலம் வேறுபடுகின்றது. உறைபனிக் குளிரான பனி படர்ந்தன வடதுருவ-தென்துருவ வலையங்கள் வலையங்களை அடுத்துள்ளன குளிர்வலைய நிலப்பகுதிகள் உலகின் நடுக்கோட்டின் அருகில் உள்ளன உலர் வலைய நிலப்பகுதிகள் வடதுருவத்தில் உறைபனிக் குளிர் தெற்கே வரவரக் குளிர் குறைகின்றது. உலகின் நடுக் கோட்டுக்கு அண்மையில் வெம்மையாக உள்ளது தெற்கே செல்லச்செல்ல மீண்டும் குளிர் தென்துருவத்திலோ உறைபனிக் குளிர். உறைபனிக் குளிரில் வாழும் எக்ஸிமோ மக்கள், கடும் பாலையில் வாழும் அரேபிய மக்கள் குளிர் வலையத்தில் வாழும் ஐரோப்பிய மக்கள் உலர் வலையத்தில் வாழும் ஆசிய-ஆபிரிக்க மக்கள் தட்பவெப்ப வேறுபாடுகளைக் கடந்து மக்கள் வாழ்கின்றமைக்கு இவை சான்று.

மழை மிகுந்து பெய்யும் நிலம், காய்ந்து வரட்சியான நிலத்தில் இருந்து வேறுபடுகின்றது. காற்று வேகமாக வீசிப் புயற்காற்றாக மாறுகின்ற, நிலநடுக்கம் ஏற்படுகின்ற எரிமலை வெடிக்கின்ற நிலப்பகுதிகளும் உண்டு.

இவ்வாறாக நிலம் வேறுபட்டு மாறுபட்டு மயங்கி அமைந்தாலும், உலகின் நிலப்பகுதி எங்கும் மனிதன் வாழ்கிறான். மனிதன் வாழா நிலப்பரப்பு இல்லை எனலாம்.

சில நூற்றாண்டுகளுக்கு முன்புவரை மனிதனின் கண்படாத நிலப்பரப்புகள் பலவாக இருந்தன . இன்றோ மனிதனின் ஆட்சிக்கு உட்படாத நிலப்பரப்பு இல்லை.

**தாயான நிலமகள்**

மனிதனை உலகுக்குத் தந்தவள் நிலமகள், மண்ணிலிருந்து தோன்றி மண்ணுக்காய் ஆவது மனித உடல், மனிதன் நிலமகளின் குழந்தை, நிலமகள் மனிதனின் தாய். மனிதனின் வாழ்வுக்கும் வளத்துக்கும் நிலமே அடிப்படை எண்ணங்கட்கும் செயற்பாட்டுக்கும் நிலமே வழிகாட்டி.

மனிதனின் உள்ளத்தில் எழும் எண்ணங்களும் சிந்தனைகளும் அவன் வாழும் நிலத்தின் சூழலை அடிப்படையாகக் கொண்டவை. இதையொட்டித்தான் வாழ்வின் பல்வேறு இயல்புகளும், பல்வேறு நிலம் சார்ந்த திணைகளாக, வகைகளாக வகுக்கப்பட்டன. மனிதனின் அகவாழ்வும் புறவாழ்வும் நிலத்தின் தன்மையதாக அமைகின்றது.

நிலத்தில் இருந்து வாழ்வு கிடைக்கின்றது. துன்பம் எழுகின்றது. இடர்ப்பாடுகள் தோன்றுகின்றன. இடர்ப்பாடு போக்கும் தீர்வுகளும் எழுகின்றன, எண்ணங்கள் கருவுற்றுச் செயலாக உருப்பெற்று முழுமை பெறும் வாழ்விடம் நிலம்.

வெவ்வேறுபட்ட நிலங்களில் வாழும் மக்கள் வெவ்வேறு இயல்பினராக உள்ளனர். அகன்ற நிலப் பரப்புக்களில் வாழ்வோர்க்கும், சிறிய தீவுகளில் வாழ்வோர்க்கும் வேறுபாடு உண்டு. கொடிய கானகத்தில் வாழ்வோர்க்கும், பசுஞ்சோலை சூழ் நிலத்தில் வாழ்வோர்க்கும் வேறுபாடுகள் உண்டு. குறிஞ்சி நிலமக்கள், மருதநில மக்களைப்போலல்லர். வாழ்வில் பொருள் தேடும் முயற்சியிலும், உணர்வு வளர்ச்சி முயற்சியிலும் அகவாழ்வு இயல்புகளிலும், ஒருவர்க்கொருவர் மாறுபட்டவர்களாக, இவர்கள் உள்ளர்.

உலகிலுள்ள ஒவ்வொரு மனிதனும் தனக்கென ஒரு நிலத்துண்டு வேண்டும் என விழைகிறான். அதனைப் பெற்றுத் தனது வாழ்விடமாக்கிக் கொள்கிறான். அந்த நிலத்தின் அடிப்படையில் அந்த வாழ்விடத்தின் செம்மையில் அவன் வாழ்வும் வளம்பெறுகிறது. அண்மைக்கால மனிதனின் நாகரீக வளர்ச்சி நகர் சாந்த நாகரீகமாக எழுகின்றது. நகர் சார்ந்த நாகரீகத்தின் எழுச்சி, நிலத்தின் நகர் தவிர்ந்த ஏனைய நிலத்தின் வளத்தில்வளத்தின், பயன்பாட்டில் எழுகின்றது. நாகரிக வளர்ச்சி பெருகப் பெருக நிலத்தின் தேவையும் அதிகரிக்கின்றது.

**நிலத்தில் உரிமை**

இன்றைய உலகில், மனிதன் சொந்தம் பாராட்டாத, உரிமை கொண்டாடாத நிலமே இல்லை. பூமி யின் நிலப்பரப்பின் வரைபடத்தை எடுத்து நோக்கினால் இந்த நிலை நன்கு விளங்கும். உலகில் உள்ள நிலப்பகுதிகள் அனைத்தையும் மனிதன் தெரிந்து வைத்துள்ளான். அந்த நிலப்பகுதி அனைத்தையும் பங்குபோட்டு வைத்துள்ளான். பெரும்பாலான நிலப்பகுதிகள் தனி மனிதனின் உரிமைச் சொத்தாகவுள்ளன, தனி மனிதனின் உரிமைச் சொத்தாக இல்லாத நிலப்பகுதிகள், மக்கள் குழுக்களுக்குச் சொந்தமாக உள்ளன. மக்களின் குழுக்கள் அமைத்துள்ள அரசுகட்குச் சொந்தமாக உள்ளன.

இந்தச் சொந்தம், இந்தப் பந்தம், இந்த உரிமை, இவற்றின் அடிப்படையில் உலகின் நிலம் முழுவதும் பங்கு போடப்பட்டுள்ளது. எல்லைகள் வகுக்கப்பட்டுள்ளன. ஆட்சி எலலைகள் வகுக்கப்பட்டுள்ளன.

ஆட்சி எல்லைக்குள், அந்த நிலப்பகுதிக்குள் வாழுகின்ற மக்கள், அந்த நிலப்பகுதியின் உரிமையாளர். அதன் பாதுகாப்பாளர், நிலத்தைப் பேணுபவர். நிலத்தின் வளத்தைப் பயன்படுத்துபவர். நிலத்தின் பயனைப் பெறுபவர். அந்த எல்லைக்குட்பட்ட நிலமே அவர்களின் நாடு.

ஒரு நாடு அமைய வேண்டுமானால், அதற்கெனத் தனியானதும், எல்லை வகுத்து அறியக்கூடியதுமான நிலப்பகுதி வேண்டும். அந்த நிலத்தில் வாழுகின்ற மக்கள், அந்த நிலப்பகுதியைப் பயன்படுத்தி, அங்கு வாழ்கிற ஒவ்வொருவரும் வளமாக, நிறைவாக, வாழ்வின் நோக்கங்களை அமைத்து அந்த நோக்கங்களை எய்துமாற்றால் அமையவேண்டும்.

காலங்கட்கூடாகப் பார்ப்போமானால், உலகின் நிலப்பகுதி பல்வேறு முறைகளில் பங்கு போடப்பட்டு வத்துள்ளது. நாட்டின் எல்லைகள் அடிக்கடி மாற்றம் அடைந்து வந்துள்ளன. சிறிய நாடுகள் பெரிய நாடுகளாகின. பெரிய நிலப்பரப்பைக் கொண்ட நாடுகள் சிறிய நாடுகள் ஆயின. நாட்டின் நிலப்பரப்பு எல்லைகள் நிலையானவை அல்ல. மாறிக்கொண்டிருப்பவை. இயற்கைக் காரணங்களால் மாறுகின்றன. அரசியல் காரணங்களால் மாறுகின்றன. பொருளாதாரக் காரணங்களால் மாறுகின்றன. மனிதனின் இடம் பெயர் இயல்பினால் மாற்றம் அடைகின்றன. நாட்டின் எல்லைகள் மட்டுமல்ல, நாட்டின் மக்களின் தொகுப்பு, அரசியல் அமைப்பு, ஆட்சி இயல்பு என்பனவும் பிறவும் வரலாற்றின் ஊடாக, காலத்தின் ஊடாக அடிக்கடி மாறிக் கொண்டே வந்துள்ளன.

**நிலத்தின் சூழல்**

மனிதனின் உடலியல்புகள், உணர்வு இயல்புகள் வாழ்வு இயல்புகள் அனைத்தின் அடிப்படையும் அவன் வாழும் நிலத்தைச் சார்ந்ததாக உள்ளது. மனிதன் பேசும் மொழி, மனிதன் மேற்கொள்ளும் தொழில், மனிதனின் அகவாழ்வு, புறவாழ்வு, அறநெறி என்பன அவன் வாழும் நிலம் தரும் சூழலை அடிப்படையாகக் கொண்டு எழுகின்றது.

ஆபிரிக்கக் கண்டத்தில் வாழும் கறுப்புநிற மக்கள், ஐரோப்பாவில் வாழும் வெள்ளை நிறத்தவர்கள், கிழக்கு ஆசியாவில் வாழும் சின்ன அமைப்புடைய சீனர்கள், இந்திய உபகண்டத்தில் வாழும் திராவிட மக்கள், அரேபியப் பாலைவனத்தைத் தமதாக்கிய அரேபிய மக்கள், தென் கிழக்காசிய நாடுகளில் வாழும் மலாய் மக்கள், இவர்கள் அனைவரும் அந்த அந்த நிலப் பகுதிக்குரியவர்கள், நிலம் தரும் சூழலுக்கேற்ப எழுந்தவர் கள், வளர்ந்தவர்கள், வாழ்கின்றவர்கள். உடலமைப்பு, உள்ள அமைப்பு, உணர்வு அமைப்பு, வாழ்வு, மொழி, பண்பாடு, அறநெறி, தொழில் முறை என்பன அவர்கள்

வாழும் நிலத்துக்கு ஏற்றதாய் எழுந்தன. காலங்கட்கூடாக இவர்கள் அந்தந்த நிலத்துக்குரியவர்களாய் இருந்திருப் பினும் மனித வரலாற்றில் அவ்வப்போது நடைபெற்ற மாபெரும் மனித இடம் பெயர் முயற்சிகள், போர்ப் படை யெடுப்புகள், வர்த்தகத் தொடர்புகள் இக் குழுக்களுக் கிடையே ஓரளவு கலவையையும் நாகரீக இணைப்பையும் தந்துள்ளன.

கடந்த சில நூற்றாண்டுகளில் நடைபெற்ற இடம் பெயர் முயற்சிகள், குடியேற்ற நடவடிக்கைகள், ஆட்சி வெறிப் போர்கள் என்பன, ஐரோப்பியக் கண்டத்தில் வாழ்ந்த வெள்ளை நிற மக்கள், உலகின் பல்வேறு நிலப் பகுதிகட்குச் செல்லவும் குடியேறவும் புதிய நாடுகளை அமைக்கவும் வழிகோலியுள்ளன.

**நிலமும் நாடும்**

நிலங்கட்கேற்ப மக்கள் வேறுபடுவதால்தான் நாடுகள் பலவாக உள. ஆகக் குறைந்த வேறுபாடுகள், ஆகக் கூடிய இணைப்பு, ஒற்றுமை, இவை தமக்குள்ளே பெற்ற மக்கள் ஒரு நாட்டில் வாழ்கின்றார்கள். அந்த நாட்டில் வாழ்கின்ற ஒவ்வொரு மனிதனும் தனது வாழ்வியல் நோக்கங்களை அமைக்கவும், அந்நோக்கங்களை நிறைவு செய்யும் வழிவகைகளைக் கையாளவும் அதனால் அம்மனிதனின் ஆளுமை முழுமை பெறவும், அம்மனிதனுடன் கூடி வாழும் மக்கள் பயன்பெறவும் நாடு அமைகின்றது. மொழி, மதம், பண்பாடு, வாழ்வு முறை, தொழில் முயற்சி, வாழ்வியல், நோக்கங்கள் என்பனவற்றில் ஒருமித்த, ஒருமைப்பாடுடைய மக்களை நாடு கொண்டுள்ளது. இவ்வியல்புகளில், ஒரு நாட்டில் வாழும் மக்களிடையே வேறுபாடுகள் இருப்பின், அவ்வேறுபாடுகளை மாறுபாடின்றிப் பேணவும் பாதுகாக்கவும் கூடிய வகையில் ஆட்சி, அரசு அமைத்துள்ள நாடுகளும் உண்டு.

**நாட்டினங்கள், நாடுகள்**

கடந்த நான்கைந்து நூறறாண்டுகளில் உலகெங்கும் நடைபெற்ற அரசியல் பரிணாம வளர்ச்சியின் சிறப்பியல்பே நாட்டினங்களின் எழுச்சியாகும். மக்களாட்சித் தத்துவம் உருப்பெற்று நடைமுறைப் படுத்து வதற்கு ஏதுவாக அமைந்தது நாட்டினங்களின் எழுச்சியே.

மன்னராட்சிக் காலத்தில் மக்கள், குழுக்களாக வாழ்ந்து தொடர்பற்றிருந்தனர் மக்களாட்சியின் பரிணாம வளர்ச்சிக் காலத்தில் இக்குழுக்கள் ஒன்றோ டொன்று தொடர்பு கொண்டன. இயைபுடைய குழுக்கள் இணைந்தன. நாட்டினமாக எழுந்தன. அறிவியல் வளர்ச்சி, தொழிற் புரட்சி, பொருளாதார முன்னேற்றம், தத்துவார்த்த வளர்ச்சி என்பன நாட்டினங்கள் எழுவதற்குப் பெரிதும் வழி வகுத்தன.

நாட்டினங்கள் நாடுகளாக எழுந்தன. வரையறுக்கப்பட்ட எல்லைகள் கொண்ட, நிலப் பகுதியைக் கொண்ட நாடுகளாக் எழுந்தன. இன்றைய உலகில் உள்ள நாடுகளின் பரிணாம வளர்ச்சியை நோக்குவோர் நாட்டின எழுச்சியை விளங்கிக்கொள்வர்,

ஒரு மொழி பேசி, ஒரு மதம் பேணி, ஒரு பண்பாடு போற்றி, வாழ்வியல் நோக்கங்களில் ஒற்றுமை கொண்ட மக்கள் ஒருவர்க்கொருவர் அயலாக வாழக் கூடிய, வரையறுக்கப் பட்ட எல்லைகளுடைய நிலப்பகுதி யைக் கொண்டு அமைகின்ற மக்களின் தொகுப்பே நாட்டிமாகும்.

யப்பான் என நாம் இன்று அழைக்கும் நாடு, சில நூறறாண்டுகட்கு முன்புவரை பல குழுக்களாய் பிரிந்து பல சோகுன்களால் ஆட்சி செய்யப்பட்டது. மக்களாட்சிக் கருத்துக்கள் வலுவடைய, யப்பானிய மொழி, யப்பானியப் பண்பாடு, யப்பானிய வாழ்வுமுறை என்பன பரிணமித்தது. இதனால் இன்றைய யப்பானிய நாடு எழுந்தது. பல குழுக்கள் ஒன்றிணைந்து, பல தீவுகள் ஒன்றிணைந்து, பல அரசுகள் ஒன்றிணைந்து, ஒரே நாடாக, ஒரே இனமாக, ஒரே ஆட்சி, ஒரே அரசு பெற்றுள்ளன. யப்பானிய நாட்டினமாகப் பரிணமித்துள்ளனர்.

பிரஞ்சுப் புரட்சிக்கு முன்பு, பிரஞ்சு மக்கள் நாட்டினமாக எழுச்சியடையவில்லை. பிரஞ்சு மக்களுக்குள்ளே குழுக்கள் இருந்தன. அரசுகள் பல இருந்தன. பிரஞ்சுப் புரட்சியின் விளைவாகப் பிரஞ்சு நாட்டினம் எழுந்தது. வரையறுக்கப்பட்ட எல்லைகளைக் கொண்ட நாடு எழுந்தது.

அரேபியர்கள் மொழியால் ஒற்றுமைப்பட்டவர்கள். அரேபிய மொழி அவர்கள் தாய்மொழி. அரேபியர்கள் அனைவரும் இஸ்லாமியர்கள். பண்பாடு வாழ்வியல் நோக்கங்கள் என்பனவற்றில் ஒருமைப்பாடு உடையவர்கள். எனினும் ஒரே நாடாக அவர்கள் எழுச்சியடையவில்லை. பல்வேறு நாடுகளாகவே இருக்கின்றர்கள். அரேபியர்கள் வாழும் நிலப்பகுதி, குழுக்களுக்குரிய நாடுகளாகவே உள்ளது. ஒரே நாட்டினமான அரேபியர்கள், பல நாடுகளாக வாழ்வதையும் காண்கின்றோம்.

ஐக்கிய அமெரிக்க மாநிலங்களில் வெள்ளை நிறத்தவர்கள், கறுப்பு நிறத்தவர்கள் ஆகிய இரு நாட்டினங்கள் வாழ்கின்றார்கள். பண்பாடு, வாழ்வு முறை ஆகியவற்றல் பிரித்தறியக்கூடிய இவ்விரு நாட்டினத்தவர்கள், பிரித்தறியக் கூடிய நிலப்பகுதியைத் தமதாகக் கொள்ளவில்லை, சொரியலாக நாடு முழுவதும் இவ்விரு நாட்டினத்தவர் களும் வாழ்வதால், ஒரே நாடாக ஒரே நாட்டில் இருவேறு நாட்டினங்களாக வாழ்கின்றனர்.

பிரிட்டன் அல்லது ஐக்கிய அரசு என அழைக்கப்படும் நாட்டில் நான்கு வெவ்வேறு நாட்டினங்கள் முன்பு வாழ்ந்தன. ஆங்கில நாட்டினம், இங் கிலாந்து என்ற நிலப்பகுதியிலும், ஸ்கொட்டிஷ் நாட்டினம் ஸ்கொட்லாந்து என்ற நிலப்பகுதியிலும், வெல்ஷ் நாட்டினம் வேல்ஸ் என்ற நிலப்பகுதியிலும், ஐரிஷ் நாட்டினம் அயர்லாந்து என்ற நிலப்பகுதியிலும் வாழ்ந்தன. இவை நான்கும் ஒரே நாடாக இணைந்த ஆட்சிக்குட்பட்டிருந்தன. சில காலத்துக்கு முன்பு ஐரிஷ் நாட்டினம் அயர்லாந்துக் குடியரசு எனத் தனி நாடாகப் பிரிந்தது. இப்பொழுது ஸ்கொட்டிஷ் நாட்டினமும், வேல்ஸ் நாட்டினமும் தங்களின் தனித் தனி நிலப்பகுதியைத் தாமே ஆட்சிசெய்யும் நாடுகளாக வேண்டும் எனப் போராடிக்கொண்டு வருகின்றன.

சேரர், சோழர், பாண்டியர், பல்லவர், ஈழத்தவர் எனப் பிரிந்திருந்த தமிழ் மக்கள், மேலைநாட்டவர் வருகையால் தம்மிடையே தொடர்பு பெருக்கினர். "நாம் தமிழர்" என்ற உணர்வுடன் செயற்பட்டு வருகின்றனர். மொழி, பண்பாடு, வாழ்வியல் நோக்கங்களால் தமிழர் தனியான நாட்டினமாக் எழுச்சி அடைந்துள்ளனர். வரையறுக்கப்பட்ட எல்லைகளையுடைய நிலப்பகுதிகளைத் தமதாகக் கொண்டிருப்பினும் தமிழ் நாட்டினம் தனி நாடு அற்ற நாட்டினமாக உள்ளது. "வட வேங்கடம் தென் குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம் ", தமிழ் நாட்டினமாகப் பரிணமித்த பின்னரும், பரந்த இந்திய அரசின் மாநிலங்களுள் ஒன்றாகவே அமைந்துள்ளது.

**தமிழ் ஈழ நாட்டினம்**

இலங்கைத் தீவில் தமிழர்களின் பாரம்பரிய நிலப்பகுதிகள் பிரித்தறியக்கூடிய எல்லைகளைக்கொண்டுள்ளன. இந்நிலப்பகுதிகளில் தமிழர்கள் இருபது நூற்றாண்டுகட்கு மேலாக வாழ்கின்றார்கள், ஆட்சி செய்தார்கள், அரசு அமைத்தார்கள் என்பதற்குரிய வரலாற்றுச் சான்றுகள் உண்டு. எனினும் இன்று, தமிழ் ஈழ நாட்டினமாகப் பரிணமித்துள்ள தமிழ் ஈழ மக்கள், தமக்குரிய தனியான நிலப்பகுதியின் உரிமையாளர்களாக இல்லை. தமிழ் ஈழ நாட்டினத்தின் நிலப்பகுதியான "தமிழ் ஈழம்" இலங்கைத் தீவின் பொதுவான ஆட்சியின்கீழ், சிங்கள நாட்டினத்தின் பெரும்பான்மை ஆட்சியின்கீழ் உள்ளது.

உலகில் உள்ள நிலப்பகுதியின் அளவு மாறாமல் இருக்கின்றது. உலகின் நிலப்பகுதிகள் அனைத்தும் மனிதனின் ஆட்சிக்குட்பட்டுள்ளன. மக்கள் தொகை பெருகவும், மாறாத அளவு நிலப்பகுதி அமையவும், இதனால் வாழக்கூடிய நிலப்பகுதி கிடைப்பது அரிதாகிக்கொண்டே போகின்றது. எவ்வளவு நிலப் பகுதியைப் பெற்றுக்கொள்ள முடியுமோ அவ்வளவையும் பெற்றுவிடவேண்டும் என நாட்டினங்கள் கருதும் காலம் தொலைவில் இல்லை. இது மனிதனுக்குப் புதிய வாழ்வு முறையைத் தரப்போகின்றது.

இலங்கைத் தீவில் இரு வேறு நாட்டினங்கள் வாழ்கின்றன. தமிழ் ஈழ நாட்டினம் ஒன்று சிங்கள நாட்டினம் மற்றொன்று. இலங்கைத் தீவின் வாழ் விட நிலப்பரப்பு மாறாமல் உள்ளது. வாழ்விட நிலப்பரப்புத் தேடும் மக்கள் தொகை பெருகுகின்றது.

பெரும்பான்மை ஆட்சி அதிகாரத்தின் துணையுடன் சிங்கள நாட்டினம் தமிழ் ஈழ நாட்டினத்தின் நிலப்பகுதியைச் சிறிது சிறிதாகக் கைப்பற்றிக் கொண்டு வருகின்றது. தமிழ் நாட்டினமோ, ஆட்சியுரிமை இல்லாத நிலையில் தனது பராம்பரிய நிலப் பகுதிகளைப் பறிகொடுத்து வருகின்றது.

தமிழ் ஈழ நாட்டினத்தினர் பலர் தமது நிலப்பகுதிகள் எவை எனச் சரியாகத் தெரியாத வர்களாக உளர். தமிழ் ஈழ நாட்டினத்திற்கு இலங்கைத் தீவில் தனியான நிலப்பகுதி உண்டு. தமிழ் ஈழ நாட்டினம் இந்தத் தனியான, பராம்பரிய வழி பெற்ற நிலப்பகுதியையும் பறிகொடுத்து விட்டால், உலகில் வேறெந்த நிலப்பகுதியையும் உரிமை கோரிப் பெறமுடியாது, சொந்தம் கொண்டாட முடியாது.

உலகில் நாடுகள், நாட்டினங்கள் அமைதியாக வாழ வேண்டுமானால், அவை தத்தம் பாரம் பரிய நிலப்பகுதிகளைப் பேணப், பயன்படுத்த, பாதுகாக்க, ஆட்சி செய்ய உரித்து உடையவர்களாக இருக்க வேண்டும். ஒவ்வொரு நாட்டினத்தினதும் அடிப்படை உரிமை இதுவாகும். முன்பு விரித்துக் கூறியதுபோல, நில மகள் மனிதனின் தாயாவாள். நிலத்தின் உரிமையின் அடிப்படையில் மனிதனின் வாழ்வு முகிழ்க்கிறது.

தமிழ் ஈழ நாட்டினம், தனக்குரிய நிலப்பகுதி எது என்பதைச் சந்தேகமறத் தெரிந்து கொள்ள வேண்டும். அந்த நிலப்பகுதி சிங்கள நாட்டினத்தாலோ, உலகி ன் வேறெந்த நாட்டினத்தாலோ பறிக்கப்படாமல் பாதுகாக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான், எந்த நிலம் தமிழ் ஈழக் குடிமகனுக்கு வாழ்வைத் தருகின்றதோ அந்த நிலத்தில் அவன் வாழவும், பழகவும் பண்பாடு பேணவும் வாழ்வியல் நோக்கங்களை நிலத்தின் உரிமையின் அடிப்படையில் நிறைவு செய்யவும் முடியும்.

**இரண்டாவது**

**முன்னோர் வழிவழி வாழ்விடம்**

பழங்குடிகள் என அழைக்கப்படுவர், ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் பன்னெடுங்காலமாக வாழ்ந்து வருபவர். அந்த நிலப்பகுதி அக் குடிமக்களின் வாழ்வுக்கும் வளத்துக்கும் இன்றியமையாத அடிப்படையாக அமைகின்றது. இடம்பெயர் முயற்சிகள் காரணமாக வந்து, ஒரு நிலப்பகுதியில் வாழ்வைப் புதிதாகத் தொடங்குபவர்கள் வந்தேறு குடிகள் என அழைக்கப்படுகின்றார்கள்.

இந்தியத் துணைக்கண்டத்தின் பழங்குடிகள் திராவிடர் களே என்பது வரலாற்று ஆராய்ச்சியாளரின் துணிபு. வடக்கே இமயமலைத்தொடர்தொட்டு தெற்கே இலங்கைத் தீவு வரையில் உள்ள துணைக்கண்ட நிலப்பரப்பு, பண்டைக்காலத்தில் திராவிட இனமக்களின் உரிமைச் சொத்தாக அமைந்தது. இலங்கைத் தீவின் பழங்குடிகள் திராவிட இன மக்களே.

வடக்கே சிந்து ஆற்றங்கரையில் அகழ் வாராய்ச்சியாளர் களால் கண்டுபிடிக்கப்பட்ட மொகஞ்சதாரோ, அரப்பா நாகரிகம் நகர்சார் நாகரிகமாகும். இங்குத் திராவிட இன மக்கள் வாழ்ந்தார்கள் வளமுற்றார்கள். ஏறந்தாழ 5000 ஆண்டுகட்கு முன்பு செழித்த இந் நாகரிகம் ஆரியரின் படையெடுப்புகளால் தரை மட்டமாக்கப்பட்டது. நாடோடி களான ஆரியர்கள் நகர்சார் நாகரிகத்தினரான திராவிடரைத் தெற்குநோக்கி விரட்டினர்.

இலங்கைத் தீவு திராவிடரின் நிலப்பகுதி, ஏறத்தாழ 2500 ஆண்டுகட்கு முன்பு விசயனும் அவனுடைய கூட்டாளிக ளும் வடநாட்டிலிருந்து இலங்கைக்கு வந்தனர். அவர்கள் சிறது சிறதாக இலங்கைத் தீவின் நிலப்பகுதியை, அங்கு ஏற்கெனவே வாழ்ந்த திராவிட இன மக்களுடன் பங்குபோடத் தொடங்கினர்.

(தொடரும்...)

# ஈகையர் திருமலை நடராஜன், நடந்தது என்ன?




திருகோணமலையில் உள்ள தமிழ் பேசும் மக்கள் பெப்ரவரி -04ந் திகதி சுதந்திர தினத்தைத் துக்கதினமாக அனுஸ்டிக்க முடிவு செய்தார்கள். அங்கு வாழ்ந்த சிங்கள மக்கள் சுதந்திர தினத்தைக் கொண்டாட விரும்பினார்கள். எனவே இரசாராருக்கும் தகராறு ஏற்படாமல் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு மாகாண அதிபர் திரு. மக்கேஷருக்கும் பொலிஸாருக்கும் ஏற்பட்டது

### சமரச விவகாரம்

அரசாங்க ஏஜன்ட் திரு மக்கேஷர் 03-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை ஒரு மகாநாடு கூட்டி தமிழ் மக்கள் துக்கம் அனுஸ்டிக்கவும், சிங்கள மக்கள் சுதந்திர தினம் கொண்டாடவும் எப்படி வசதிசெய்யலாம் என்று ஆலோசனை நடத்தினார். இந்த ஆலோசனையின் பிராகாரம் காலை 06 தொடக்கம் பிற்பகல் 02 மணி வரை தமிழ் பேசும் மக்கள் துக்கதின ஆர்ப்பாட்டங்களை நடத்துவதென்றும், பிற்பகல் 02 மணி முதல் மாலை 06 மணிவரை சிங்கள மக்கள் சுதந்திர தினத்தைக் கொண்டாடுவதென்றும் முடிவு செய்யப்பட்டது. தமிழர் தங்கள் இல்லங்களிலும், வர்த்தக நிலையங்களிலும் கறுப்புக்கொடி உயர்த்துவதென்றும் சிங்களவர்கள் தங்கள் இடங்களில் சிங்கக் கொடி உயர்த்துவதென்றும் ஒருவரையொருவர் நிர்ப்பந்திப்பதில்லை என்று முடிவு செய்யப்ட்டது.

### சந்தை பிரச்சனை

ஆனால் திருமலை சந்தையைப் பற்றி ஒரு பிரச்சினை கிளம்பிற்று.திருமலை சந்தை நகரசபைக்கு சொந்தமான கட்டடமாகும். திருமலை நகரசபை கட்டத்திலும், அதற்கு சொந்தமான இடங்களிலும் கறுப்புக்கொடி உயர்த்துவதென முடிவு செய்திருந்தது. இதன்படி சந்தைகயிலும் கறுப்புக்கொடி உயர்த்த நகர சபைக்கு உரிமையுண்டு. ஆயினும் சந்தை முழுவதிலும் சிங்கள வியாபாரிகளே இடம் பிடித்தருந்தமையால் அங்கு கறுப்புக்கொடி ஏற்றுவது அவர்களைப் புண்படுத்தும் என்று வாதிக்கப்பட்டது. முடிவில் சந்தை கட்டடத்தில் சிங்கக்கொடியும் ஏற்றக்கூடாது.

கறுப்புக்கொடியும் ஏற்றுவதில்லை. அதனை ஒரு பொது இடமாகக் பாவிக்க வேண்டும் என்று சுமூகமான முடிவு செய்யப்பட்டது. இந்தளவிற்கு திருமலையில் வாழும் தமிழ் பேசும் மக்களும், நகர சபையினரும் பெருந்தன்மையாக விட்டக்கொடுத்தனர். மரக்கறி சந்தையிலும் மீன் விற்பனைச் சந்தையிலும் எந்தவிதமான கொடியும் ஏற்றுவதில்லையென்ற முடிவை தமிழரும் சிங்களவரும் ஒப்புக்கொண்டனர்.

### ஊர்வலம்

04ஆம் திகதி காலையில் பல்லாயிரக்கணக்கான தமிழ் பேசும் மக்கள் கறுப்புக்கொடிகளைப் பிடித்துக்கொண்ட கறுப்பச் சின்னங்களை அணிந்துகொண்டும் மடத்தடி சந்தியிலிருந்து நகரசபை காரியாலயத்தை நாடி அமைதியுடன் ஊர்வலமாகச் சென்றனர். இவ்வூர்வலத்தைத் திருமலை பிரதிநிதி தீரு. என். ஆர். இராஜவரோதயம், ஊர்காவற்றுறை பிரதிநிதி வி. ஏ. கந்தையா, கப்டன் ஏ. ஸி. கனகசிங்கம், டாக்டர் துரைநாயகம் ஆகியயோர் முன்னின்று நடத்தினர். ஊர்வலம் நகரசபைக் காரியாலயத்தை அடைந்ததும் நகரசபை தலைவர் திரு. த. ஏகாம்பரம் அங்கு ஒரு கறுப்புக் கொடியை ஏற்றிவைத்து உணர்ச்சிகரமாக ஒரு சொற்பொழிவை நிகழ்த்தினார். பின்னர் அங்கு திரளாக சென்று திருமலை மணிக்கூண்டுக் போபுரத்தின் மீதும் கறுப்புக்கொடி உயர்த்தினார்.

இதைத் தொடர்ந்து திருமலை காளிகோயில் முன்றலில் ஒரு பிரமாண்டமான பொதுக்கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் திரு.இராஜவரோதயம் தலைமைதாங்கி சுமார் மூன்று நிமிடங்கள் பேசியிருக்கலாம். அப்போது கூட்டத்தில் ஒரு பரபரப்பு ஏற்பட்டது.வீர இளைஞர்கள் மரக்கறி – மீன் சந்தையை நாடி ஓட்டம் பிடித்தனர். என்ன காரணம் என்று பார்த்தபோது, கண்ணியமாகச் செயற்பட்ட ஒப்பந்தத்தை மீறி சிங்களவர்கள் சிலர் மீன் சந்தையிலும், மரக்கறி சந்தையிலும் தனிச் சிங்கள கொடிகளை ஏற்றிவைத்து விட்டனர் என்று தெரியவந்தது.

### பொலிஸ் இராணுவம்

உடனே அங்கிருந்த தலைவர்களும் அந்த இடத்திற்குச் சென்றனர். மாகாண அதிபருக்கும், மாவட்ட நீதிபதிக்கும், பொலிஸாருக்கும், டெலிபோன் செய்யப்பட்டது. அனைவரும் அங்கு வந்து சேர்ந்தனர். இராணுவமும், பொலிஸ் படையும் கூட துப்பாக்கிகள் சகிதம் அங்கு வந்து வட்டமிட்டு அணிவகுத்து நின்றன.

### முடிவை மீறுவதா?

மாகாண அதிபர் மக்கேஷரும் தலைவர்களும் சந்தை கட்டடங்களிலிருந்து சிங்கக் கொடிகளை இறக்கி சமாதானத்தைக் காக்குமாறு அன்பாக வேண்டுகோள் விடுத்தனர்.ஆனால் சிங்களவர்களோ, மணிக்கூண்டு கோபுரத்தின் மீது ஏற்றப்பட்ட கறுப்புக்கொடியை இறக்க வேண்டும் என்று அடம்பிடித்தனர். அவர்களின் கோரிக்கை நியாயமற்றது என்றும் மணிக்கூண்டு கோபுரம் நகர சபையின் உடமை என்றும் முதல் நாள் மாநாட்டில் சந்தை மட்டுமே பொது இடமாக ஒப்புக்கொள்ளப்பட்ட தென்றும் மணிக்கூண்டு கோபுரம் பொது இடமாகாது என்றும் வாதிக்கப்பட்டது. தமிழ் பேசும் மக்கள் அந்த இடத்தில் ஆயிரக்கணக்கில் திருண்டு விட்டனர். சிங்களவர்கள் எல்லோரும் கூட்டமாகத் திரண்டு மார்க்கெற்றின் இரு தலைவாசல்களையும் அடைத்து நின்றனர்.

துப்பாக்கி முழங்கிற்று

இந்த நேரத்தில் டும்..டும்.. என்று இரு வெடியோசைகள் கிளம்பின. எங்கேயா பட்டாசு கொளுத்தப்படுகின்றதென்று ஆரம்பத்தில் மக்கள் எண்ணினார்கள். ஆனால் அந்தோ பரிதாபம்..! கூட்டத்தில் கூக்குரல் கிளம்பிற்று. நடராஜா என்கிற இளைஞரின் மார்பில் குண்டு பாய்ந்ததினால் அவர் பதறிக் கதறிக்கொண்டு அடிசாய்ந்தார். துடிக்கத் துடிக்க அவர் உயிர் பிரிந்தது. திரு. வ. நடராஜா என்கிற மற்றொரு இளைஞர் படுகாயப்பட்டர். முதியவர் ஒருவரின் கண்களினூடாக குண்டு பாய்ந்தவிட்டது. இன்னொரு இளைஞருக்கு நெற்றியில் காயம்பட்டது. மற்றும் பலருக்கும் காயங்கள் ஏற்பட்டன. சன சமுத்திரம் அல்லோலகல்லோலப்பட்டது. எங்கும் குழப்பம். எங்கும் கலவரம். எங்கும் பயங்கரத் தத்தளிப்பு நிலவியது.

கூட்டத்தைக் கலைந்து போகுமாறு மாவட்ட நீதிபதி திரு. கந்தசாமி கட்டளையிட்டார். கூட்டம் கலைந்தது. துப்பாக்கியினால் தாக்குண்டவர்கள் வைத்தியசாலை நோக்கி விரைந்தெடுத்துச் செல்லப்பட்டனர்.

நடந்தது இதுதான்

வெளியில் தலைவர்களும், மக்களும் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கையில், சிங்களவர்கள் திரண்டு சந்தை வாயில்களை மறைத்து நிற்க, சிங்களவர் ஒருவர் சந்தைக்குள் மறைந்து நின்று, சநதை கிராதித் துவாரத்தின் மூலம் இரட்டைக் குழல் துப்பாக்கியினால் குருட்டுவாக்கில் கூட்டத்தை நோக்கி இரண்டு முறை சுட்டிருக்கிறார். இரவைகள் நாலத்திசைகளிலும் பாய்ந்து, தமிழ் மக்களைப் பலிகொண்டன. கொடி காக்கும் பணியில் ஈகையர் நடராஜன் தன் இன்னுயிரைப் பணையம் வைத்தார்.

### ஒருவர் கைது

மேற்படி துப்பாக்கி சம்பவம் சம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் எல்.ஜி.மனுவல் சில்வா என்ற சிங்களவர் கைதுசெய்ப்பட்டிருக்கிறார். கோர்ட்டில் ஆஜர் செய்தபோது இம்மாதம் 15-ந் (1957) திகதிவரை அவரை

விளக்கமறியலில் வைக்கும்படி நீதிபதி உத்தரவிட்டிருக் கிறார். திருமலை துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தையடுத்து நகரத்தில் பல பகுதிகளிலும் ஆங்காங்கு சில சிறு சிறு கலவரங்கள் ஏற்பட்டன. சிங்களவர்கள் தெருக்களில் தாக்கப்பட்டனர் என்றும், சிங்களவர்களுக்கு சொந்தமான சில கடைகள் தீயிடப்பட்டனவென்று தெரிகிறது.

### சிங்களவர் வெளியேற்றம்

திருமலையில் இருந்த பல சிங்கள முதலாளிகளும், மற்றையோரும் குடும்ப சகிதம் திருமலையைவிட்டு வெளியூர்களுக்கு சென்றனர் என்று தெரிகிறது. இப்போது திருமலையில் அமைதி நிலவுகிறது. இராணுவமும் பொலிஸாரும் காவல் புரிகின்றனர். ஆயினும் இந்த நிமிடம் வரையில் கலவரங்கள் தனிந்தவிட்டதாகத் தெரியவில்லை.

### ஒரு மைல் தூரத்திற்கு இறுதி ஊர்வலம்

துப்பாக்கிக் குண்டக்கு இரையான ஈகையர் திரு நடராஜன் அந்த இடத்திலேயே சாவடைந்தார். குண்டு மார்பின் ஊடாகப் பாய்ந்திருந்தது. திரு. நடராஜனுடைய திருஉடலையும், மற்றும் காயப்பட்டவர்களையும் உடனடியாகத் திருமலை வைத்தியசாலைக்கு எடுத்துச்சென்றனர். அவர்களைப் பின்தொடர்ந்து திரு. வி. ஏ கந்தையா வைத்தியசாலைக்கு சென்றார்.

### கந்தையாவின் கண்ணீர்

வைத்தியசாலை முன்னால் திரு. நடராஜனனின் திரு உடலம் வளர்த்தப்பட்டிருந்ததைக் கண்ட திரு. வி. ஏ. கந்தையா வாய்விட்டுக் கதறியழுதார். அவருடைய கண்களிலிருந்து கண்ணீர் மாலைமாலையாக ஓடிற்று. திரு உடலத்தைச் சுற்றியிரந்தவர்கள் திரு. கந்தையா வைக் கண்டதும் "ஐயா முடிந்தது, வளர்த்திவிட்டோம். இதோ பாருங்கள் ஐயா" என்று கதறினார்கள். அந்தக் கோலத்தைக் திரு. கந்தையாவினால் சகித்துக்கொள்ள முடியவில்லை. எனினும் அவர் சகலருக்கும் ஆறுதல் கூறி, "சுதந்திரப் போராட்டத்தில் இதையெல்லாம் சகித்தக்கொண்டு தேசத்திற்காகவும், மொமிக்காகவும் மேலும் மேலும் ஈகம் செய்யத் தயாராக இருக்க வேண்டும்" என்றார். அப்படி கூறும்பொது அவரது நா தளர்ந்தது.

பின் திரு. கந்தையா காயப்பட்ட மற்றவர்களைப் பார்வையிட்டு ஆவன செய்தார். திருமலை வைத்திய சாலையில் சந்திரசிகிச்சை நிபுணர் இல்லாத காரணத்தினால் காயப்பட்ட இருவர் உடனடியாக குருநாகல் வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டனர். மற்றும் இருவர் கண்களில் காயம்பாட்டதனால் கண்டி கண் வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டனர். பின்னர் திரு கந்தையா இறப்பு விசாரணையில் கலந்துகொண்டார்.

### தமிழரசுக் கட்சி கையேற்றது

ஈகையர் திரு நடராஜனின் திரு உடலத்தை இலங்கை தமிழரசுக் கட்சியின் திருகோணமலை கிளை கையேற்றது. திரு நடராஜனுக்கு திருகோணமலையில் உற்றார் உறவினர் யாரும் கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது.

திரு உடலத்தை திருமலைத் தமிழரசுக் கட்சியின் காரியாலயத்தில் சகல மரியாதைகளுடனும் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்து. தமிழ் பேசும் பொதுமக்கள் வரிசையில் நின்று திரு உடலத்தைப் பார்வையிட்டு சாம்பிராணி புகைத்து, மலர் வளையங்கள் சூட்டித் தமிழ் ஈகையருக்குத் தங்கள் இறுதி மரியாதையை தெரிவித்துக்கொண்டனர்.

### ஊர்வலம்

05-ந் திகதி செய்வாய்கிழமை (1957) பிற்பகல் திருஉடலம் ஊர்வலம் நடைபெற்றது. ஆயிரக் கணக்கான மக்கள் சுமார் ஒரு மைல் நீளத்திற்கு இந்த ஊர்வலத்தில் கலந்துகொண்டனர். தெருநெடுகிலும் பெண்கள் கூடி நின்று கண்ணீர் வடித்தனர். திரு நடராஜனின் திரு உடலப் பெட்டியை திருமலை நகரசபைத் தலைவர் திரு. த. ஏகாம்பரம், திருவாளர்கள் வி.ஏ. கந்தையா, எம்.பி என். ஆர். இராஜவரோதயம் எம்.பி, எம். தாமோதரம்பிள்ளை, சட்டத்தரணி துரைநாயகம், கப்டன் ஏ.ஸி. கனகசிங்கம் ஆகியோர் கையேந்தித் தூக்கிச் சென்று ஊர்வலத்தை ஆரம்பித்துவைத்தனர். திரு உடல ஊர்வல ஏற்பாடு களை எல்லாம் திரு. எம். இராமநாதன் கவனித்தக் கொண்டார். தொண்டர்கள் சுமார் 50 மலர் வளையங்க ளைத் தாங்கிச் சென்றனர்.

### திரு உடலம் அடக்கம்

கந்தளாய் சுடுகாட்டில் திரு உடலம் நல்லடக்கம் செய்யப்பட்டது. திரு உடலத்தை இடக்கம் செய்த இடத்தில் ஒரு ஞாபகார்த்த கட்டடத்தைக் கட்டி தமிழ் மொழியையும், கொடியையும் காக்க ஊயர் நீத்த ஈகையர் நடராஜன் என்று பொறிக்க வேண்டும் என்று எல்லோராலும் கருத்து முன்வைக்கப்பட்டதனாலே திரு உடலம் தனகம் செய்யப்படாமல் அடக்கம் செய்யப்பட்டது என்று தெரியவருகிறது.

நன்றி – சுதந்திரன் 10.02.1957

## இங்கினியாகலை இனப்படுகொலை 05.06.1956

1940களில் அக்கால கட்டத்தில் விவசாய அமைச்சராக இருந்த எ.எஸ். சேனநாயக்கா அம்பாறை மாவட்டத்தில் அரச நிறியுதவியுடன் பல சிங்களக் குடியேற்றத் திட்டங்களை நிறுவினார். இதன் பின்னர் அரச உதவியோடு அம்பாறை மாவட்டத்தில் கல்லோயா அபிவிருத்தித்திட்டம். திருகோணமலையில் கந்தளாய் குடியேற்றத் திட்டம், அல்லைக் குடியேற்றத்திட்டம் போன்ற குடியேற்றத் திட்டங் கள் உருவாக்கப்பட்டு சங்கள மக்கள் வெளிமாவட்டங் களிலிருந்து கொண்டு வந்து குடியேற்றப்பட்டார்களா. அவர்களுக்கு சகல வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டது. காவற்துறை - இராணுவ பாதுகாப்பும் வழங்கப்பட்டது. அத்துடன் விகாரைகளும் கட்டிக் கொடுக்கப்பட்டது. பௌத்த விகாரைகளில் பெரிய காண்டாமணி பொருத்தப்பட்டு மணியோசை கேட்கும் தூரம் மட்டும் சிங்கள பௌத்தர்க ளுக்குரிய பிரதேசமாக உத்தியோகப்பற்றற்ற வகையில் கணிக்கப்பட்டது. இந்த வகையில் தமிழ்மக்களிற்கு சொந்தமான நிலங்கள் சூறையாடப்பட்டன.

1956ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் காலஞ் சென்ற எஸ்.டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா இலங்கைளின் பிரதமரானர். அவரது தேர்தல் வாக்குறுதி களிலொன்றான சிங்களம் மட்டுட் சட்டத்தை 1956 ஆம் ஆண்டு யூன் மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார். இதற்கு எதிராக அக்காலகட்டத்தில் அகில இலங்கைத் தமிழரசுக்கட்சி தனது எதிர்ப்பைத் தெரிவித்து நேரடி நடவடிக்கையில் ஈடுபட முடிவுசெய்தது. இதன் விளைவாக அகில இலங்கை தமிழரசுக்கட்சி 1956 ஆம் ஆண்டு யூன் மாதம் ஐந்தாம் திகதி கொழும்பிலுள்ள பழைய நாடாளு மன்றத் கட்டிடத்திற்கு முன்னால் காலிமுகத்திடலில் சத்தியாக்கிரகப் போராட்டத்தை நடாத்தியது. இதில் தமிழ்த் தலைவர்கள் கட்சி பேதங்களுக்கு அப்பால் கலந்து கொண்டார்கள். அக்கால கட்டத்தில் புகழ் பெற்றிருந்த தமிழ் கல்விமான் வணபிதா தனிநாயகம் அடிகளும் இந்தச் சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்டார். அன்றைய தினம் சத்தியாக்கிரகிகள் சிங்ளக் காடையர்களால் தாக்கப் பட்டதுடன், சிங்களவர்களால் தமிழர்கள் மீதான இனக்கொலை தூண்டிவிடப்பட்டது. தமிழர்கள் தாக்கப் பட்டார்கள் பல தமிழ் மக்கள் மோசமான வயையிலும் கோராமாகவும் கொல்லப்பட்டதுடன். கொழும்பிலுள்ள தமிழர்களுக்குச் சொந்தமான கடைகள் கொள்ளையடிக்கப் பட்டபின் தீவைத்துக் கொளுத்தப்பட்டன. இலங்கைதீவு முழுவதும் தமிழர்களுக்கு எதிரான பகையுணர்வு மேலோங்கிக் காணப்பட்டது.

அம்பாறை மாவட்டத்தில் குடியேற்றபட்ட சிங்களக் காடையர்கள் தமிழர்களுக்கு எதிரான வன்முறைகளில் ஈடுபட்டார்கள். இதில் இங்கினியாகலை என்ற இடத்திலிருந்த கல்லோயா ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்தச் சபைக்குச் சொந்தமான கரும்புத் தொழிச்சாலையில் வேலை செய்துவந்த நூற்றிஐம்பது தமிழத் தொழிலாளர்கள் அதே தொழிற்சாலையில் வேலை செய்த சிங்களத் தொழிலாளர்களால் தாக்கப்பட்டார்கள். பலர் கூரிய ஆயுதங்களால் வெட்டப்பட்டுக் கொலை செய்யப்பட்டார்கள் அரை குறை உயிருடன் இருந்தவர்களுகம் இறந்தவர்களம் எரியும் தீயில் தூக்கி வீசப்பட்டார்கள். இங்கு நடைபெற்ற வரலாற்றில் முதல் முதலில் பெருந் தொகையாகத் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவமாகும். இப்படுகொகைளில் ஏறக்குறைய நூற்றிஐம்பது தமிர்கள் படுகொலை செய்யப்பட்டதாக "Emergency 58"என்ற நூல் தகவல் வெளியிட்டுள்ளது.

08ம் பக்கம்...

செய்யமுடியாது. சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்திட்டம் ஆனது கடந்த இரண்டு வருட காலப் பகுதியில் இலங்கைப் போரின் ஆரம்பக்கட்டத்திலும் இறுதிக் கட்டப் போரிலும் அவருடைய வகிபாகத்தை குறிப்பிடும் அவரைப்பற்றிய இரகசிய ஆவணக் கோவையைத் தயாரித்தது.இந்த ஆவணக்கோவை அமெரிக்க அரசிற்கும்தடைசெய்யும் எனைய அமைப்புக்களுக்கும் கிடைக்ககூடியதாகச் செய்தோம். அண்மையில் ஐக்கிய இராச்சியத்திலுள்ள உலகத்தடைகள் அமைப்பிற்கு அங்கும் சவேந்திர சில்வாவை தடை செய்வதற்கு ஒரு வேண்டுகோளைச் சமர்ப்பித்திருக்கின்றோம்.

இது இடம்பெறுவதை உறுதிப்படுத்துவதற்கு நீங்கள் அனைவரும் உங்களுடைய உள்ளூர்ப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இது பற்றி எழுதுவது உட்பட பிரிட்டிஸ் அரசாங்கம் மீது அழுத்தத்தைப் பிரயோகிப்பது அவசியமாகும்.

நீங்கள் வேறு நாடுகளில் வாழந்து வந்தால் நீங்கள் சவேந்திர சில்வாவையும் தடைசெய்யுமாறு கேட்டு உங்கள் அரசாங்கங்களுக்கு எழுதமுடியும். இது ஒரு ஆரம்பம் மாத்திரமே, மோசமான சர்வதேசக் குற்றங்களைச் செய்த ஏனைய இலங்கைக் குற்றவாளிகளையும் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தும் விதமாகITJP ஆனது தொடர்ந்தும் ஏனைய ஆவணக் கோவைகளையும் தயாரித்து வருகின்றது.

இலங்கையில் கொலைகள் உட்ப்பட சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் கடுமையாக கண்காணிக் கப்படல்,அச்சுறுத்தப்படுதல், மனித உரிமைப் பாதுகாவலர்கள் மற்றும் சாட்சியாளர்கள் தமது உயிருக்கு அஞ்சுதல் என அடக்குமுறை தொடர்கின்றது. ஆனால் அங்கு நடைபெறும் மீறல்களை ஆவணப் படுத்துவதற்கும், அரசாங்கத்தின் நடவடிக்கைகள் மீது கவனத்தைச் செலுத்துகின்றோம் என்பதை உறுதிப்படுத்துவதற்கும் நாங்கள் தொடர்ந்தும் நிலைமையை கண்காணிப்பது அவசியமாகும்.

அதேநேரத்தில் இரகசியம் காத்தல் மற்றும் சாட்சியாளர் பாதுகாப்பு குறித்து மிகவும் கவனமாக இருப்பது அவசியமாகும். இலங்கையினுடைய சட்டமா அதிபராக இருந்த போது வலிந்து காணாமற்போதல், கொலை, சித்திரவதை மற்றும் பாலியல் வன்புணர்வுடன் தொடர்புபட்ட குற்றவாளிகளை பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தாமல் தவறிழைத்தமையால் மொஹான் பீரிஸை கௌரவமான ஐக்கிய நாடுகளின் சர்வதேச சட்ட ஆணையகத்திற்கு நியமிப்பதை தடுக்குமாறு சர்வதேச சமூகத்திற்குITJP அழைப்புவிடுத்திருக்கிறது.

இது தொடர்பான நடவடிக்கை தொடர்பில், இவரது நியமனம் பாதிக்கப்பட்டவர்களை இழிவு படுத்துவதாகவும் சட்ட ஆட்சி மீதான தாக்குதலாகவும் இருக்கும் என்பதால் நீதி தேடுவதையும் பொறுப்புக்கூறலையும் நாம் ஒருபோதும் மறக்காமல் இருப்பதை உறுதிப்படுத்துவதற்கு நாங்கள் அனைவரும் எமது சொந்த வழிகளில் ஆக்கங் கொண்டவர்களாகவும் துணிவு கொண்டவர்களாகவும் இருப்பது அவசியமாகும்.

12 வருடங்களுக்கு முன்னர் சுதந்திரத்திற்கான தேடுதலில் உயிரிழந்தவர்களின் இழப்பு வீண் போகமல் இருப்பதை நாங்கள் உறுதிப்படுத்துவதற்கான ஒரே வழி இதுவாகும். -நன்றி-



தமிழீழ விடுதலைப் போரில் வீரச்சாவடைந்த அனைதுப் போராளிகளுக்கு எமது வீர வணக்கத்தையும், சிங்கள, இந்தியப்படைகளால் அநியாயமாகப் படுகொலை செய்யப்பட்ட அனைத்து தமிழீழ மக்களுக்கும் எமது அமைதி வணக்கத்தையும் செலுத்திக் கொள்கிறோம். -சங்கத்தமிழ் –




# மே 18 2021

# இருள் எந்துவோம்!

சிறீலங்காவிற்கான இராணுவத் தளபதி முள்ளிவாய்க்காலுக்காக யாராவது நினைவுகூருவதற்காக ஒன்று கூடினால், அவர்கள் அனைவரும் கூண்டோடு சிறையில் அடைக்கப்படுவார்கள். இதனைத் தொடர்ந்து தாயகத்தில் உள்ள மக்களுக்கு ஒரு சிக்கல் இருநக்கிறது: இவ்வருடம் எவ்வாறு முள்ளிவாய்க்காலை நினைவு கூர்வது என்பதே அது. அதை நாம் எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றோம் என்பது பற்றி அரசியல் அரசியல் அறிவியக்கத்தினுடாக திரு. குணா கவியழகன் அறியத்தருவது.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நாளை தமிழ் மக்கள் எப்படி நினைவு கூர்வது பொருத்தமாக இருக்கும்? நினவை கூர்வதற்கும் தடை விதிக்கும் நிலையில் நினைவுகூர்தலை எப்படி கடைப்பிக்கலாம்! என்பதே அதன் சாராம்சம். அவருடைய கருத்தாக்கம் என்பது தமிழ் மக்கள் நாம் “இருள் ஏந்துவோம்” என்பதாகும்!

இருள் ஏந்துவோம் என்றால் என்ன? ஏன் நாம் இருள் ஏந்துவோம் எனும் கருத்தாக்கத்தை முன்வைக்க வேண்டும்? அது எத்தகைய அடிப்படையில் பொருத்தப்பாடாக இருக்கும்?
மாவீரரை நாம் எவ்வாறு நினைவு கூருகின்றோம்?

நாங்கள் மாவீரர்களை ஒளியேந்தி நினைவு கூருகின்றோம். எங்களுக்காக, எங்களுடைய விடுதலைக்காக, எங்களுடை உரிமைக்காக உயிர்நீத்தவர்களை நாம் மதிக்கும் பொருட்டு, அவர்களுக்கு மரியாதை செலுத்தும் பொருட்டு, அந்த அர்ப்பணிப்பு அரசியலை ஏற்றுக் கொள்ளும் பொருட்டு நாங்கள் தங்கள் தியாகத்தின் மூலம் ஒளியாக வழிகாட்டி அவர்களுக்காக ஒளியேந்தி எங்கள் மரியாதை செலுத்துகிறோம்.

ஆனால், எங்களுடைய இனம் ஒரு இனப்படுகொலைக்கு ஆளாகிய ஓர் உட்சபட்சமான அந்த மனித படுகொலையை நினைவு கூருவதற்கு முள்ளிவாயக்கால் நினைவு நாளாக மே 18ஐ நாங்கள் எடுத்துக் கொண்டிருக்கிறோம். அந்த மே 18ஐ நினைவு கூருவதற்கு நாங்கள் “இருள் ஏந்துவோம்” என்று சிறீலங்கா அரசாங்கத்திற்கு எதிராக அந்தக் கருத்தாக்கத்தை முன்வைப்பது மிகவும் பொருத்தமாக இருக்கும்.

இருள் ஏந்துபோம் என்றால் என்ன? இருள் ஏந்து வோம் என்பது எங்களுடைய சூழலில், எங்களுடைய வீட்டில், எங்களுடைய வார்த்தக நிறுவனங்களில், எங்களுடைய நகரத்தில் எங்களுடைய ஒளியை அணைப்பதன் மூலமாக ஒரு இரண்டு நிமிடம் இருள் மயமாக்குவது. இரண்டே இரண்டு நிமிடங்கள் நாங்கள் இருள் மயமாக்குவதன் மூலம் நாங்கள் எங்களுடைய எதிர்ப்பை காட்டமுடியும். இதற்காக யாரையும் கைது செய்ய முடியாது. எங்களுடைய இடங்களில் எங்களுடைய சொந்த மின்சார விளக்கை அணைப்பதினை யாரும் தடுக்கவும் முடியாது, எது சொல்லவும் முடியாது. அது எங்களுடைய பிரச்சனை, அது தனிமனிதர்களுடைய பிரச்சனை. எனவே நாங்கள் ஒரு செயல்பூர்வ அரசியல் வழடிவமாகப் பயன்படுத்த முடியும்.

அது பொருந்தி வருவதற்கான இடமும் எப்படி நாங்கள் மாவீரர்களை நினைவு கூருவதற்காக ஒளியேந்துகின்றோமோ அந்த மகத்துவத்தை




அவர்களுடைய அர்ப்பணிப்பை நாங்கள் நினைவு கூரும் பொருட்டு ஒளி ஏந்துகின்றோமோ அதுபோல எங்களுக்கு இழைக்கப்பட்ட, இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் இழைக்கப்பட்ட மாபெரும் மனித அழிவை இந்த உலகம் பார்த்திருந்தும் அதனைக் கண்டு கொள்ளாத மனித நாகரீகம் வெட்கித் தலைகுயக்கூடிய அந்த மனித அழிவாகும். எங்களுக்கு நிகழ்ந்த அந்த அழிவை, அநீதியை உலகெங்கும் வாழ்கின்ற தமிழர்கள் நாங்கள் இருள் மயமாக்கி இது எங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி, நாங்கள் அதனை நினைவில் வைத்துக் கொள்கிறோம் என்று காட்டுவதற்கு ஒரு பொருத்தமான வடிவம் இதுவாகும்.

எங்கெல்லாம் நாங்கள் செறிந்து வாழ்கின்றோமோ, அங்கெல்லாம் அப்பகுதியை இருட்டாக்கும் பொழுது அது ஒரு செய்தியாக வெளியே வரும். முக்கியமாக நீங்கள் சிந்தித்துப் பாருங்கள். நகரங்களை நாங்கள் முதலாவதாக எடுத்துக் கொள்வோம். உடனடியாக எங்களுக்கு இருக்கின்ற காலம் குறைவாக இருப்பதனால் இதில் அரசியல்வாதிகள், மாணவர்கள், சமூகத் தலைவர்கள் என்று இவர்கள் இதில் ஈடுபடுவார்களாய் இருந்தால் நிச்சயமாக இதனை மக்களுக்குப் புரிய வைத்து இந்த இருள் ஏந்துகின்ற விடயத்தை எங்களால் செய்யமுடியும். நாங்கள் இருட்டாக்கினால் அது செய்தி. எங்களைச் சூழ இருந்தவர்களுக்கு அது ஒரு செய்தி. சிங்கள அரசாங்காத்திற்கு ஒரு செய்தி, இந்த உலகத்திற்கு ஒரு செய்தி: எங்களுக்கு நிகழ்ந்த இந்த அநீதியை நாங்கள் நினைவில் வைத்துக் கொள்கின்றோம். அந்தக் காலத்தில் நீங்கள் உங்கள் கண்களைக் கட்டி வாய்களைப் பொத்தி மௌனமாக இருந்தீர்கள். மௌனமாக இருந்தது இவ்வுலகம் என்பதனை நாங்கள் நினைவில் வைத்துக் கொள்வதற்கான ஓர் எதிர்வடிவமாக ஓர் ஆயுதமாகப் பயன்படுத்துவதற்கு இரண்டு நிமிடங்களை நாங்கள் எங்களைச் சூழந்து இருளில் வைக்கமுடியும்.

ஆனால், கடைகளில் அந்த நேரம் எப்படி இயங்குவது என்துதற்கு ஒரு பொருத்தமான வடிவமும், வீடுகளில் இயங்குவதற்கு ஒரு பொருத்தமான வடிவமுமகா நாங்கள் மின்சார விளக்கை அணைக்கின்ற அதேநேரம் நாங்கள் ஒரு மெழுகுதிரியை அல்லது ஒரு விளக்க ஏற்றி இறந்தவர்களுக்கு, கொல்லப்பட்டவர்களுக்கு வணக்கம் செலுத்துவதாகவும் அந்த விளக்கேற்றுவதாக இருக்கும், அதேநேரம் எங்கள் நடமாட்டத்தை நாங்கள் ஒரு குறைந்த ஒளியில் சுருக்கி கொள்ளவதாகவும் இருக்கும். அதாவது எங்களைகச் சுற்றி ஒளி இருக்கும் அதில் நாங்கள் நினைவு கூருவோம் இறந்தவர்களை, எம்மவர்களை. அதேநேரம் எங்களைச் சூழவுள்ள அந்த உலகத்தை நாங்கள் இருட்டாக்குவோம். எப்படி ஒரு இருண்ட உலகச் சூழலில் எங்களை வைத்து அழித்தார்களோ, அதனை ஒரு குறியீடாக ஆக்குவதற்கு நல்லதொரு குறயீட்டு வடிவமாக இருக்கும்.

முடிந்தால் இந்த அரசியல் அறிவியக்க காணொளியைப் பார்க்கின்ற நண்பர்கள், பத்திரிகையாளர்கள் இதனை மிகப்பெரிய பரவலாக்கம் செய்யமுடியும். உங்கள் உறவினர்கள், ஊரவர்கள், நண்பர்கள் மத்தியில் பகிரப்படும் பொழுது அதனை அவர்கள் மாபெரும் செயல்வடிவம் கொடுக்க முடியும். அதற்கான ஒரு பொருத்தமான நேரமாக தாயகத்தில் இதனை இரவு 07 மணி என்று எடுத்தும் புலம் பெயர்ந்த தேசங்களில் 09 மணி (காரணம் மேற்குநாடுகளில் இந்நேரம் தான் இருள் சூழலைக் காணமுடியும்) எனவும் விளக்கியுள்ளார் ஆய்வாளர் திரு. குணா கவியழகன்.

“மகத்தான தியாகங்கள் செய்த மாவீரர்களை ஒளியேந்தி நினைவுகூர்வதுபோல், உலகம் கண்டு காணாது வாய்மூடி இருக்க நடந்த மே 18ஐ இனக் கருவறுப்பு நாளை “இருள் ஏந்துதல்” மூலம் எங்கள் எதிர்ப்பை உலகறியச் செய்வோம். இன்று சிறீலங்கா எனும் இருண்ட தேசத்தில் நினைவுகூருவதற்கும் உரிமை மறுக்கப்பட்ட தமிழ் மக்களின் பேரவல நிலையையும் உலகறியச் செய்வோம்.

நன்றி – திரு. குணா கவியழகன்

# முள்ளிவாய்க்கால்

## வலி சுமந்த பதிவுகள்...

